விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri.Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 321 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 19 புதன்கிழமை (05.11.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


# காணி விடுவிப்பில் வெளிப்படை அவசியம்

## ஐ.நாவின் இலங்கைக்கான ஒருங்கிணைப்பாளர் மார்க்



(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் தனியார் காணிகளை விடுவிப்பதில் வெளிப்படையாகவும் நியாயமாகவும் இருக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் அன்ரூ பிரான்ஸ் தெரிவித்துள்ளார். (04ஆம் பக்கம் பார்க்க)

## சங்குப்பிட்டியில் பெண் சடலமாக மீட்பு

### பிரதான சந்தேகநபரான தவில் வித்துவான் கைது



15ஆம் பக்கம் பார்க்க

## சுன்னாகம் சூராவத்தையில் வன்முறைக் கும்பல் வீடு புகுந்து அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் சூராவத்தையில் வன்முறைக் கும்பல் ஒன்று வீடு புகுந்து அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளது. 15ஆம் பக்கம் பார்க்க

## வெட்டுக் காயங்களுடன் இளம் குடும்பப் பெண் வவுனியாவில் சடலமாக மீட்பு



(வவுனியா)

வவுனியா பூம்புகாரில் கழுத்தில் வெட்டுக்காயங்களுடன் இளம் குடும்பப் பெண் ஒருவர் 15ஆம் பக்கம் பார்க்க

## எதிர்வரும் காலங்களில் மன்னாரில் காற்றாலைத் திட்டங்களை இடைநிறுத்த அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் மன்னாரில் காற்றாலை மின் உற்பத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதை இடைநிறுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நாடளாவிய ரீதியில் மீள் புதிப்பிக்கப்படும் வளங்களின் விரிவாக்கத் திட்டத் திறகமைய, அதிகளவான காற்று ஆற்றல்வளம்கொண்ட பிரதேசமாக அடையாளங் காணப்பட்டுள்ள மன்னார் தீவில் மூன்று காற்றாலை மின்னுற்பத்தித் திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

குறித்த கருத்திட்டங்களில் ஒரு கருத்திட்டமான தம்பபவனி காற்றாலை மின்னுற்பத்தி நிலைய நடவடிக்கைகள் 2021ஆம் 04ஆம் பக்கம் பார்க்க


## காரைநகர் மணல்பிட்டியில் குளவிக்கொட்டுக்கு இலக்கான குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணல்பிட்டியில் குளவிக்கொட்டுக்கு இலக்கான குடும்பஸ்தர் ஒருவர் 15ஆம் பக்கம் பார்க்க

## இந்தியாவின் சந்தையை அணுகுவதனால் தொழில்துறையை முன்னேற்றலாம்

### சஜித்திடம் இந்திய நிதி அமைச்சர்



(புதுடில்லி)

இந்தியாவின் சந்தையை அணுகுவதனால் இலங்கையின் தொழில்துறையை முன்னேற்ற முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித்திடம் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, புதுடில்லியில் அமைந்துள்ள நிதி அமைச்சில் இந்திய நிதி 04ஆம் பக்கம் பார்க்க

## உடுவிலில் கிணற்றிலிருந்து குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

உடுவில் மல்வம் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை (04) அதிகாலை இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் கிணற்றில் இருந்து மீட்கப் 15ஆம் பக்கம் பார்க்க

## யாழில் கடன் தொல்லையால் விபரீத முடிவெடுத்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழில் கடன் தொல்லையால் விபரீத முடிவெடுத்த ஒருவர் மரணமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள் 15ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரில் விபத்து ஒருவர் பலி

(மன்னார்)


மன்னார் முசலி சிலாவத்துறை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலியானதுடன் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

15ஆம் பக்கம் பார்க்க

## கோம்பயன்மணல் மின் தகன மேடையில் 930 கிலோ கஞ்சா தீயிட்டு முற்றாக அழிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களில் கைப்பற்றப்பட்ட 930 கிலோ கேரள கஞ்சா தீயிட்டு அழிக்கப்பட்டுள்ளது.



04ஆம் பக்கம் பார்க்க

## நிமோனியாத் தொற்றால் கந்தரோடையில் ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கந்தரோடையில் நிமோனியாத் தொற்றால் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த கதிரைமலை விக்னேஸ்வரன் (வயது-50) என்ற ஒரு 15ஆம் பக்கம் பார்க்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நடுவு நிலை தவறாது நன்மை பயக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

## திருமதி ஜெயராணி சின்னையா



பிறப்பு 27.01.1952 இறப்பு 03.11.2025

கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. ஜெயராணி சின்னையா அவர்கள் கடந்த 03.11.2025 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையாவின் (ஓய்வு பெற்ற பிரதம லிகிதர் - இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தியாகராஜா (இளைப்பாறிய பிரதம தபால் அதிபர்) - நாகரட்ணாம்பாள் தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய அதிபர்) - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் நிலானி (கொழும்பு), நிசாந்தன் (CEO - MR Seal), நிசாந்தினி (தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நிஷான் (Sierra Steel Colombo), அபர்ணா (Managing Director- MR Seal), அருள்குமரன் (தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபை) ஆகியோரின் அன்பு மாமியும் ஜெகநாதன் (லண்டன்), குகதாசன் (அவுஸ்திரேலியா), ஜெயகுமாரன் (பிரான்ஸ்), ஜெயசோதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வநாயகி (லண்டன்), கீத்தா (அவுஸ்திரேலியா), சந்திரகுமாரி (பிரான்ஸ்), ஜெயக்குமார்(ஓய்வு பெற்ற ஆசிரியர் - புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்), Dr.தணிகாசலம் (அவுஸ்திரேலியா), குணமணி (கொழும்பு), காலஞ்சென்ற Dr.இரத்தினகோபால், சுந்தரலிங்கம் (துன்னாலை), கணேசலிங்கம் (ஜேர்மனி), சரோஜினிதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் தரஞ்சன், கெஷ்வின், நிர்துலா, சுவராகினி, சாகித்தியன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 06.11.2025 வியாழக் கிழமை காலை 09:00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல. 25, புதுவீதி,
கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

(5830)

தகவல் : குடும்பத்தினர்
077 677 9274(மகன்)

SPECIAL OFFER!!
i3 Desktop Computer Full Set
(Brand New) (One year Warranty)
CPU
69990/=
• 500GB • 24" TV • Mouse Pad
• 4GB • Keyboard • Speaker
• Windows 11 • Mouse
FREE-4GB PENDRIVE
(C-4255)
CONTACT
0212224865
0770633408
ST ANTONYS COMPUTER
189, KKS ROAD JAFFNA

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## 10ஆம் ஆண்டு நிறைவில் உம் நினைவுகள் சுமந்து...

திருமதி
### நிகிலா சுதர்சன்



மலர்வு 17.04.1971 உதிர்வு 05.11.2015


வெகுவாய்க் கடக்கும் காலத்தில்
தசமகாலம் காண்கின்ற உம் நினைவுகள்
விழிமுன்னே இணையும் காட்சிகளால்
நகர்கின்றன வாழ்வின் பக்கங்கள்
வர்ணனையின் வாக்கியங்களில்
எம்மில் உறைந்த உம் நினைவலைகள்
மருகிப்போகாதே
காலம் கடந்த தசாப்தங்களிலும்
காரிருள் வானில் மின்னும் உடுக்கள் போல்
எண்ணிலடங்கா உம் நினைவுகள்......

இல.27/14,
1ம் ஒழுங்கை, ஈச்சமோட்டை.

(5816)

நீங்கா நினைவுகளுடன்...
கணவர், பிள்ளைகள்

# மரண அறிவித்தல்



மலர்வு 17.05.1944 உதிர்வு 03.11.2025

## வேலுப்பிள்ளை சுப்ரமணியம்
## (மணியம், அருள்மணி)

யாழ். அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி உருத்திரபுரம், 110/2 திருவையாறு, Cergy-Pontoise பிரான்ஸ் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சுப்ரமணியம் அவர்கள் கடந்த 03.11.2025 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முருகேசு - மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் செல்லம்மா (மணி) அவர்களின் அன்புக் கணவரும் உசானந்தன் (உசன்), தீபா, உதயா, சேர்ஜிகா(சேகா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கோமளாயினி (ஜெனி), உஷானந்தன்(நந்தா), ஆதவன் (ரூபன்), ஆந்திரயாஸ் (Andreas) ஆகியோரின் அன்பு மாமனாரும் யுவன், மீரா, லீனா, வித்தியா, ரமணி, நிலா, இளங்கோ, எழிலன், வேலோன், அலெக்சாண்டர் (Alexandre) சுப்ரமணியம் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற தர்மலிங்கம் (சுவாமிநாதன்) - வள்ளியம்மை, காலஞ்சென்றவர்களான நவரத்தினம் சபாரத்தினம் மற்றும் காலஞ்சென்ற அருளானந்தம் விமலராணி, ஐயம்பெருமாள்(கனடா)- காலஞ்சென்ற தனலெட்சுமி, காலஞ்சென்ற விமலாதேவி - பாலச்சந்திரன், காலஞ்சென்ற நடேசப்பிள்ளை - கலாரஞ்சினி, பரமேஸ்வரி (ராசாத்தி- கனடா)- குமாரசாமி, சாரதா(செல்லம் - அனலைதீவு இலங்கை) - காலஞ்சென்ற குணரத்தினம், குமணன் - கலாநிதி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் அருளம்பலம்(பிரான்ஸ்) - காலஞ்சென்ற ஞானசௌந்தரி, காலஞ்சென்ற தம்பிமுத்து - காலஞ்சென்ற மகேஸ்வரி/ யோகம்மா (அவுஸ்திரேலியா) மற்றும் காலஞ்சென்ற மார்கண்டு - மனோரமா, காலஞ்சென்றவர்களான கோபாலப்பிள்ளை - ஞானவதி, காலஞ்சென்றவர்களான சரஸ்வதி - இரத்தினம்; மங்கையற்கரசி - குலேந்திரதாசன், காலஞ்சென்ற சண்முகரத்தினம் - திலகவதி, சரவணபவன்(மாணிக்கம்) - பத்மாதேவி (பிரான்ஸ்), தர்மரத்தினம் - தியாகராணி (பிரான்ஸ்), லோகநாதன் - மனோரஞ்சி, கோகுலகௌரி - உதயகுலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 12.11.2025 புதன் கிழமை பிரான்ஸில் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(C-4259)

ச.மு.லோகநாதன்
118, D.10 உருத்திரபுரம்,
கிளிநொச்சி.(0773602261)

செல்லம்மா(மணி) -மனைவி
+33744940431
+33950302451

குமணன் - சகோதரன்
+33666978308

உசன் - மகன்
[illegible]

நந்தா - மருமகன்
+ 33617677255

ரூபன் - மருமகன்
+33634012240

தகவல்:
ச.மு.குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நேர அதிகரிப்பு சர்ச்சை

# போராட்டத்தில் குதிக்கும் ஆசிரியர் சங்கம்

**(கொழும்பு)**

**பாடசாலை நேரத்தை அதிகரிக்கும் தீர்மானத்தை இரத்து செய்ய அரசாங்கத்துக்கு நாளை மறுதினம் 7ஆம் திகதி வரையில் கால அவகாசம் வழங்குவதாக ஆசிரியர், அதிபர் தொழிற்சங்க கூட்டணி அறிவித்துள்ளது.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இவ் விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

எடுக்கப்பட்ட தீர்மானத்தை மாற்றாவிட்டால் டிசம்பர் முதல் வாரத்தில் நாடளாவிய தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம் எனவும் குறித்த கூட்டணி எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாடசாலை நேரத்தை மேலும் அரை மணி நேரம் நீடிக்கும் தீர்மானத்தை தொழிற்சங்கங்கள் உட்பட தொடர்புடைய அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடிய பின்னரே எடுக்கப்பட்டதாகப் பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மாற்றங்களைச் செய்யும் போது வெவ்வேறு கருத்துகள் வெளிப்படுவது சாதாரணமானது என்றும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் எந்தவொரு ஆய்வையும் நடத்தாமல் பாடசாலை நேரத்தை நீடிக்க அரசாங்கம் முடிவெடுத்துள்ளதாக அதிபர்கள் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது. (நி)

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் வெளியாவதில் தாமதம்

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தை முன்மொழியும் நடவடிக்கைகள் இன்னும் நிறைவு பெறவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் அமைக்கப்பட்டுள்ள நிபுணர் குழு, கடந்த செப்ரெம்பர் மாதத்தில் புதிய சட்டமூலத்துக்கான முன்மொழிவுகளை நிறைவு செய்வதாக அறிவித்திருந்தது.

எனினும், குறித்த குழு, இன்னும் தமது பணிகளை நிறைவுறுத்தவில்லை என நீதி அமைச்சு தரப்புகள் தெரிவித்துள்ளன.

இதனையடுத்து, குறித்த முன்மொழிவை விரைவில் வெளிக்கொணரும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் நீதி அமைச்சின் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவை என்பன அரசாங்கத்துக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகின்றன.

அரசாங்கமும் இந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நிறைவுறுத்த போவதாகவும் அதற்கு பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை முன்மொழியவுள்ளதாகவும் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## அதிகரிக்கும் டெங்கு நோயாளர்கள்


### வைத்திய ஆலோசனை பெறுமாறு அறிவுறுத்து

(கொழும்பு)

டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டின் 11 மாவட்டங்களில் இவ்வாறு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பதிவான கனமழையுடனான காலநிலை காரணமாக ஏற்பட்ட நுளம்புகளின் பெருக்கம் காரணமாகவே இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டுள்ளதாக சமூக மருத்துவ நிபுணர் டாக்டர் பிரஷீலா சமரவீர தெரிவித்துள்ளார்.




அதன்படி கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, கண்டி மற்றும் குருநாகல் மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.


இவ்வாறான சூழலில் காய்ச்சல், இருமல் போன்ற அறிகுறிகள் காணப்படுமாயின் முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுவது பொருத்தமானதென வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் சுவாச நோய்கள் ஏற்பட்டுள்ள எந்தவொரு தரப்பினரும் மூச்சு விடுவதில் சிரமம் காணப்பட்டால் உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெற வேண்டுமெனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (நி)

விராட் விஸ்வப் பிரம்மணே நமஹ

## மரண அறிவித்தல்

### கனகசபை ஆச்சாரி தியாகராஜா ஆச்சாரி



பதுளையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை, பெரிய தம்பிரான் வீதியை வதிவிடமாகவும் கொண்ட கனகசபை ஆச்சாரி தியாகராஜா ஆச்சாரி அவர்கள் 04.11.2025 செவ்வாய்க்கிழமை காலை சிவபதமெய்தினார்.

அன்னார் கமலாம்பிகையின் அன்புக் கணவரும், கண்ணன், காலஞ்சென்ற கிருஷ்ணா மற்றும் கல்யாணியின் அன்புத்தந்தையும், நவபவானி (மிதுனா), சிவபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், வானதி, ரிஷ்யந்தன், குணால், சேஷனா அவர்களின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற இந்திராணி பரமசிவம் மற்றும் பதுளை இராஜேந்திரன் (மணி), ஜெயலெட்சுமி கதிரவேலு, காலஞ்சென்ற மட்டக்களப்பு நடராஜா மற்றும் பதுளை கனகராஜா, காலஞ்சென்ற தர்மராஜா மற்றும் விஜயகுமார், காலஞ்சென்ற இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 07.11.2025 வெள்ளிக்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

தி.கண்ணன் (மகன்) 076 609 4991

ப.இந்திரகுமார் 077 724 5965

பெரிய தம்பிரான் வீதி,
வண்ணார்பண்ணை. (5824)

## அம்பலாங்கொடையில் துப்பாக்கிச் சூடு

### வர்த்தகர் உயிரிழப்பு

(காலி)

காலியில் அம்பலாங்கொடை நகர சபைக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் வர்த்தகர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நேற்றுக்காலை 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அம்பலாங்கொடை நகர சபைக்கு அருகில் காரில் சென்ற இனந்தெரியாத நபர்களால் இந்த துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த வர்த்தகர் பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அம்பலாங்கொடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

## கண்ணீர் அஞ்சலி



யா/அச்செழு மெ.மி.த.க பாடசாலையில் அதிபராக கடமையாற்றிய

**திரு.மு.இராஜவரோதயம்**

அவர்களின் அன்புத் தாயார்

**அமரர்.**

**முருகேசு கமலவேணி**

அவர்கள் 02.11.2025 அன்று இறைபதமடைந்துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

**கோட்டக்கல்விப் பணிப்பாளரும், அதிபர்கள் சங்கமும் கோப்பாய் கல்விக் கோட்டம்.** (C-4253)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணி விடு...

அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தனியார் காணிகளை விடுவிப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் வெளிப்படையாகவும் நியாயமாகவும் தொடர வேண்டும் என்றும் உரிமைகள் மீட்டெடுக்கப்படும், மக்களால் கேட்கப்படும் மற்றும் சமூகங்கள் செழிக்க அதிகாரம் அளிக் கப்படும் இடங்களில் மட்டுமே நல்லிணக்கம் வேரூன்றும்.

நிலத்தை உரிய உரிமையாளர்களிடம் திருப்பிக் கொடுப்பது என்பது. கண்ணியத்தை மீட்டெடுப்பது, காயங்களைக் குணப்படுத்துவது மற்றும் நம்பிக்கையை வளர்ப்பது பற்றியது. இது குடும்பங்கள் தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பவும் வறுமைச் சுழற்சியிலிருந்து விடுபடவும் உதவுகிறது.

யாழ்ப்பாணம் பலாலிப் பகுதியில் தனியார் நிலங்களை விடுவிப்பதில் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற்கும் சவால்களை எதிர்கொள்வதற்கும் சமீபத்தில் நடைபெற்ற உயர்மட்டக் கூட்டம் நல்லிணக்கத்தை நோக்கிய ஒரு வரவேற்கத்தக்க படியாகும். ஐக்கிய நாடுகள் சபை இலங்கை இந்தச் செயன்முறையை ஆதரிக்கத் தயாராக உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணம் பலாலிப் பகுதியில் அமைந்துள்ள தனியார் காணிகளை அவற்றின் உரிமையாளர்களுக்கு விடுவிப்பது தொடர்பான முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற்கும் தற்போதைய சவால்களை நிவர்த்தி செய்வதற்கும் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அலுவலகத்தில் அண்மையில் உயர் மட்டப் பேச்சுவார்த்தையொன்று இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இந்தியாவின்...

அமைச்சர் நிர்மலா சீதாராமனை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தியா போன்ற பெரிய சந்தை வாய்ப்புகளை அணுகுவதன் மூலம் இலங்கையின் தொழில் துறையை வேகமாக முன்னேற்றம் காணச் செய்ய முடியும் என்று இந்திய நிதி அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

வலுவான உள்நாட்டு தொழில் துறைகள் மூலம் இலங்கையின் பொருளாதார இறையாண்மையை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் 2022இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது இந்தியா வழங்கிய 4 பில்லியன் அமெரிக்க டொலர் ஒத்துழைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது நன்றியை இதன்போது தெரிவித்தார்.

அத்துடன், ஒரு தனி நாடாக இலங்கைக்கு வழங்கிய மிகப் பெரிய நிதி மானியம் இதுவாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொழில் துறை கொள்கை மற்றும் டிஜிட்டல் ஆளுகை தொடர்பில் இந்தியாவின் சாதனைகளைப் பாராட்டிய எதிர்க்கட்சித் தலைவர், ஒப்பீட்டு ரீதியாக நிலைத்தன்மை காணப்பட்ட போதிலும், இலங்கை இன்னும் வெளிநாட்டு கையிருப்புக்களை மீண்டும் கட்டியெழுப்புதல், ஏற்றுமதிகளைப் பன்முகப்படுத்தல் மற்றும் வறுமை ஒழிப்பு உள்ளிட்ட முக்கிய சவால்களை எதிர்கொண்டு வருகின்றது என்றும் தெரிவித்தார்.

வெளிப்படையான மற்றும் நம்பிக்கை அடிப்படையிலான ஒத்துழைப்பின் அவசியப்பாடு தொடர்பில் இரு தரப்பினரும் இங்கு இணக்கம் வெளியிட்டனர். (ம-7)

## 930 கிலோ...

யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றம் மற்றும் மேலதிக நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் கடந்த காலங்களில் பல்வேறு நடவடிக்கைகளின்போது மீட்கப்பட்ட கஞ்சாப் போதைப்பொருள் சான்றுப் பொருட்களாக நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டிருந்தது.

அது தொடர்பிலான வழக்கு விசாரணைகளைத் தொடர்ந்து 930 கிலோ கஞ்சாவையும் தீயிட்டு அழிக்க மன்று உத்தரவிட்டது.

அதனடிப்படையில் கோம்பயன்மணல் மயான மின் தகன மேடையில் கஞ்சாப் போதைப் பொருள் தீயிட்டு முற்றாக அழிக்கப்பட்டது.

யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நீதிவான் மற்றும் மேலதிக நீதிவான் ஆகிய இருவரின் நேரடி கண்காணிப்பில் அவை அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## மன்னாரில்...

ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏனைய கருத்திட்டங்களான 20 மெகாவோட் காற்றாலை மின்னுற்பத்தி மற்றும் 50 மெகாவோட் காற்றாலை மின்னுற்பத்தி நடவடிக்கைகள் முறையே இரண்டு தனியார் நிறுவனங்களால் 2025 டிசம்பர் மற்றும் 2026 டிசம்பர் மாதத்தில் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

பிரதேச மக்கள் சமர்ப்பித்துள்ள சுற்றாடல் மற்றும் சமூகப் பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு, மன்னார் தீவு மக்களின் விருப்பமின்றி தொடர்ந்தும் குறித்த பகுதியில் காற்றாலை மின்னுற்பத்திக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டாமென ஜனாதிபதியினால் தொடர்புடைய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக, வலுசக்தி அமைச்சரால் அமைச்சரவைக்குத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ம-7)

## கரைதுறைப்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)
## கிளைப் பொதுச்சபைக் கூட்ட அறிவித்தல்
## 08.11.2025 (சனிக்கிழமை)

மேற்படி சங்கத்தின் துணைவிதிப்பிரிவு 28ற்கு அமைய சங்கத்தின் சகல கிளைகளிற்குமான கிளைக்குழு தெரிவுக்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின் படி நடைபெறவுள்ளது.

திகதி:- 08.11.2025 சனிக்கிழமை நேரம் :- காலை 10.00 மணி

| கிளை. இல | கிளைகளின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|
| 01 | சிலாவத்தை | பொது நோக்கு மண்டபம், மாதிரிக்கிராமம் |
| 02 | முல்லைத்தீவு வடக்கு | முல்லைத்தீவு மகா வித்தியாலயம் |
| 03 | கள்ளப்பாடு | பொது நோக்கு மண்டபம், கள்ளப்பாடு வடக்கு |
| 04 | முள்ளியவளைB | பொது நோக்கு மண்டபம், முள்ளியவளை |
| 05 | முள்ளியவளைA | பொதுநோக்கு மண்டபம் கல்யாணவேலவர் கோவிலடி |
| 06 | தண்ணீரூற்று A | கிராம சேவையாளர் அலுவலகம், தண்ணீரூற்று மேற்கு |
| 07 | கணுக்கேணி | பொதுநோக்குமண்டபம் கற்பகப்பிள்ளையார் கோவிலடி |
| 08 | முள்ளிவாய்க்கால் | பொது நோக்கு மண்டபம் முள்ளிவாய்க்கால் கிழக்கு |
| 09 | மாத்தளன் | பொது நோக்கு மண்டபம் அம்பலவன்பொக்கணை |
| 10 | வற்றாப்பளை | கிராம சேவையாளர் அலுவலகம் வற்றாப்பளை |
| 11 | கேப்பாபுலவு | பொது நோக்கு மண்டபம் கேப்பாபுலவு |
| 12 | அளம்பில் | பொது நோக்கு மண்டபம் அளம்பில் தெற்கு |
| 13 | செம்மலை | CDO கூட்ட மண்டபம் செம்மலை |
| 14 | குமுழமுனை B | பொது நோக்கு மண்டபம் குமுளமுனை மத்தி |
| 15 | குமுழமுனை A | குமுழமுனை மகா வித்தியாலயம் |
| 16 | கொக்குத்தொடுவாய் | பொது நோக்கு மண்டபம் கொக்குத்தொடுவாய் மத்தி |
| 17 | கொக்கிளாய் | சனசமூக நிலைய மண்டபம் கொக்கிளாய் |
| 18 | நீராவிப்பிட்டி | கிராம சேவையாளர் அலுவலகம் நீராவிப்பிட்டி |

கிளை பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமூகமளித்து வாக்களிக்க தகைமையுடைய உறுப்பினர்களிற்கு சங்கத்தின் செயலாளரினால் கூட்ட அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. கிளைக்குழு தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய பொது அறிவித்தல்களை சங்கத்தின் சகல கிளைகளிலும் பொது இடங்களிலும் பார்வையிடலாம். கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களில் சமூகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்கள் குறித்த அறிவித்தலின்படி கிளை பொதுச்சபைக் கூட்டங்களிற்கு சமூகமளிக்குமாறும், வாக்களிக்க தகைமையுள்ள வாக்காளர்களிற்கு அழைப்புக்கடிதம் கிடைக்கப் பெறாவிடினும் தங்களுக்கு உரித்தான கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடத்திற்கு சமூகமளித்து கூட்டத்தில் கலந்து கொள்ள முடியும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**செ.பூலோகசீலன், செயலாளர்,**
**கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம்,**
**முல்லைத்தீவு.**

(C-4254)

## சந்தைகளில் நேற்றைய விலை / பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 280 | 300 | 300 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 240 | 200 | 240 | 200 |
| பச்சைமிளகாய் | 280 | 250 | 200 | 250 | 200 |
| தக்காளி | 180 | 200 | 200 | 200 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 280 | 150 | 90 |
| கோவா | 180 | 180 | 200 | 200 | 140 |
| கரட் | 220 | 200 | 250 | 250 | 190 |
| பூசணி | 80 | 80 | 100 | 100 | 30 |
| புடோல் | 150 | 250 | 200 | 250 | -- |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 150 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 200-300 | 300 | 300 | 220 |
| பெரிய வெங்காயம் | 180 | 160 | 150 | 200 | 130 |
| பாகற்காய் | 600 | 600 | 500 | 800 | 450 |
| வெண்டக்காய் | 150 | 250 | 200 | 300 | 110 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 250 | 300 | 250 |
| பயற்றங்காய் | 200 | 200 | 150 | 200 | 200 |
| லீக்ஸ் | 250 | 220 | 250 | 250 | 160 |
| பீற்றூட் | 150 | 120 | 200 | 250 | 100 |
| கறிமிளகாய் | 600 | 450 | 500 | 800 | 350 |
| முருங்கைக்காய் | 400 | 450 | 250 | 400 | 200 |
| போஞ்சி | 600 | 500 | 600 | 600 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 220 | 300 | 250 | -- |
| கீரை – 1 பிடி | 150 | 80-140 | 150 | 150 | -- |
| தேசிக்காய் | 1800 | 1500 | 1600 | 1500 | -- |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 150-200 | 155 |
| இராசவள்ளி | 700 | 800 | 600 | 800 | 750 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 600 | | -- |
| முள்ளங்கி | 150 | 160 | 150 | 200 | 60 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 150 | 60 | 35 |
| வல்லாரை | 100 | 60 | 100 | 80 | 40 |
| ஈரப்பலா | 150 | 200 | 100 | 200 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ சமய தீட்சை

(யாழ்ப்பாணம்) சைவ பரிபாலன சபையின் இல. 66 கல்லூரி வீதி, நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் ஐப்பசி மாதம் இறுதி வெள்ளிக்கிழமையான எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 10 மணிக்கு தீட்சை வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

தீட்சை பெறவிரும்புபவர்கள் பதிவுகளை 021 222 7678 எனும் இலக்கத்தினூடாக மேற்கொள்ள முடியுமென சைவ பரிபாலன சபையின் செயலாளர் வி.தயாபரன் அறிவித்துள்ளார். (3)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
### மூளாய் வீதி 2 ஆம் ஒழுங்கை, இல 19, வட்டாரம்-04

வலிகாமம் மேற்குபிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 04. மூளாய் வீதி, 2ஆம் ஒழுங்கையிலுள்ள இல: 19 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் **துரையப்பா கிருஸ்ணபிள்ளை** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்திற்கு **துரையப்பா கிருஸ்ணபிள்ளையும் பெண் பூரணமும்** ஆகியவர்கள், குறித்த ஆதனத்தினை கடந்த 50 வருடங்களுக்கு மேலாக எதுவித பிசகு, தடையுமின்றி ஆட்சி செய்து வருவதாக வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு இ.த விக்னராசா முகதாவில் 748/16.07.1989 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள்.

**நாராணபிள்ளை கந்தசாமி பெண் சந்திரவதனா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு இ.த விக்னராசா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 845/03.03.1990ஆம் இலக்க உறுதியால் குறித்த **துரையப்பா கிருஷ்ணபிள்ளையும் பெண் பூரணமும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**ஶ்ரீராஜசுந்தரம் எழில்வதனி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ஜெயசித்ரா சிறீதரன் முகதாவில் 5321/25.10.2023 ஆம் இலக்க உறுதியால் குறித்த **நாராணபிள்ளை கந்தசாமியும் பெண் சந்திரவதனாவும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **ஶ்ரீராஜசுந்தரம் எழில்வதனி** ஆகியவர் ஆதனப்பெயர்மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **ஶ்ரீராஜசுந்தரம் எழில்வதனி** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனத்தின் பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்/ செயலாளர் வலிகாமம் மேற்கு பிரதேசசபை.** (6817)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
### 06, வண்ணாதெரு 1 ஆம் ஒழுங்கை, வட்டாரம்-02

வலிகாமம் மேற்கு பிரதேச சபை அராலி உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 02, வண்ணாதெரு 1 ஆம் ஒழுங்கையிலுள்ள இல 06 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **அரியகுட்டி பொன்னையா** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தின் ஓர் பகுதியினை **அரியகுட்டி பொன்னையாவும் பெண் அன்னபூரணமும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு சி.இரகுநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1697/09.10.1941ஆம் இலக்க உறுதியால் **முருகர் மாணிக்கம்** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த ஆதனத்தினை உள்ளடக்கிய பெயர் மாற்றத்திற்குட்படும் முழு ஆதனத்தினை **பொன்னையா மல்லிகானந்த பரமகுலசிங்கம்** ஆகியவர் குறித்த ஆதனமானது தனது பெற்றோர் ஆகிய அரியகுட்டி பொன்னையாவும் பெண் அன்னபூரணமும் 1933.10.10ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு எஸ்.நாகலிங்கம் முகதாவில் 3752ஆம் இலக்கத்தில் எழுதப்பட்ட அறுதி உறுதியின் பிரகாரமும், குறித்த 1697ஆம் இலக்க உறுதியின் பிரகாரமும் குறித்த ஆதனத்தை கொள்விலை ஆதனமாகக் கொள்வனவு செய்திருந்தார்கள் என்றும் பின்னர் அவ் ஆதனத்தில் பல ஆண்டுகளாக வசித்து வந்தார்கள் என்றும், அவர்கள் தமது கடைசிக் காலத்தில் தனக்கு நன்கொடையாக வாய்ச்சொல் மூலம் தந்து இருந்தார்கள் என்றும் குறித்த ஆதனம் நீடித்த தடங்கலற்ற குறுக்கீடற்ற ஆட்சிக்குட்பட்டமையால் தனது ஆதனமே என்றும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் 2688/20.09.1998ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

**சிதம்பரப்பிள்ளை சிவபாலன் பெண் சிவாஜினி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3418/17.11.2000ஆம் இலக்க உறுதியால் குறித்த **பொன்னையா மல்லிகானந்த பரமானந்த பரமகுலசிங்கமும் பெண் சித்திரமணியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி முழு ஆதனத்தினை சீதனமும், உடன்பாடுமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர்: **"பெரியவளவும் கொட்டடி வளவும்"**
இறை: **அராலி கிழக்கு**
வீஸ்தீரணம்: நில.பர 02
எல்லைகள்: கிழக்கு- சபாபதிப்பிள்ளை திருவிளங்கத்தினதும் மனைவியினதும் உரித்தாளரின் ஆதனமும், **வடக்கு-** கந்தசாமி தவராசாவின் மனைவியின் ஆதனமும், **மேற்கு-** கார்த்திகேசு கந்தையாவின் ஆதனமும், **தெற்கு-** றோட்டு

குறித்த **சிதம்பரப்பிள்ளை சிவபாலன் பெண் சிவாஜினி** ஆகியவர் ஆதனப்பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **சிதம்பரப்பிள்ளை சிவபாலன் பெண் சிவாஜினி** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர் /செயலாளர் வலிகாமம் மேற்கு பிரதேசசபை.** (6805)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
### 90, முதலியார்காட்டு ஒழுங்கை, வட்டாரம்-03

வலிகாமம் மேற்கு பிரதேச சபை அராலி உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 03 முதலியார்காட்டு ஒழுங்கையிலுள்ள இல: 90 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் **வேலாயுதம் பெண் வனிதலட்சுமி** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் ஒரு பகுதியினை **மார்க்கண்டு பெண் நேசரத்தினம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வ.மயில்வாகனம் முகதாவில் 1753/20.08.1978 ஆம் இலக்க உறுதியால் கந்தசாமி கைம்பெண் இராசமணி ஆகியவரிடமிருந்து அறுதியாகப்பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**முருகேசு சின்னத்தம்பி மகள் யோகேஸ்வரி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வ.பரமானந்தம் முகதாவில் 2788/07.10.1989ஆம் இலக்க உறுதியால் குறித்த **அம்பலவாணர் மார்க்கண்டுவும் பெண் நேசரத்தினமும்**, ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**அம்பலவாணர் மார்க்கண்டு மகள் கேதீஸ்வரி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வ.பரமானந்தம் முகதாவில் 2890/28.08.1991ஆம் இலக்க உறுதியால் குறித்த **அம்பலவாணர் மார்க்கண்டுவும் பெண் நேசரத்தினமும் முருகேசு சின்னத்தம்பி மகள் யோகேஸ்வரியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் மற்றொரு பகுதியினை **அம்பலவாணர் மார்க்கண்டு மகள் நகுலேஸ்வரி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வ.பரமானந்தம் முகதாவில் 2889/25.08.1991 ஆம் இலக்க உறுதியால் **அம்பலவாணர் மார்க்கண்டுவும் பெண் நேசரத்தினமும்** ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **அம்பலவாணர் மார்க்கண்டுவும் பெண் நேசரத்தினமும்** ஆகியவர்கள் குறித்த நகுலேஸ்வரிக்கு ஏற்கனவே குறித்த 2889ஆம் இலக்க உறுதியால் நன்கொடையளிக்கப்பட்டுள்ள மேற்படி ஆதனத்தினை, குறிந்த நகுலேஸ்வரிக்கும், இராசரத்தினம் கிருபாலராஜாவும் ஆகியவர்களுக்கிடையிலான திருமணத்தின் நிமித்தம் வழங்கப்படும் சீதன ஆதனமாக வெளிப்படுத்துவதாகக் குறிப்பிட்டு பிரசித்த நொத்தாரிசு அ.வே.அருணகிரிநாதன் முகதாவில548/29.05.1994ஆம் இலக்கத்தில் சீதன வெளிப்படுத்துகை உறுதியொன்றினை நிறைவேற்றியிருந்தார்கள்.

**முத்துச்சாமி பாலகிருஸ்ணமூர்த்தியும் பெண் சறோஜாதேவியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் 3439/19.08.2002ஆம் இலக்க உறுதியால் **இராசரத்தினம் கிருபாலராசாவும் பெண் நகுலேஸ்வரியும், அம்பலவாணர் மார்க்கண்டு மகள் கேதீஸ்வரியும்,** மார்க்கண்டு கைம்பெண் நேசரத்தினமும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி முழு ஆதனத்தினையும் அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்து முடையவரானார்.

**அமலராஜ் பெண் ரஜனி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் 3719/28.12.2002ஆம் இலக்க உறுதியால் **முத்துச்சாமி பாலகிருஷ்ணமூர்த்தியும் பெண் சறோஜாதேவியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தில் ஒரு பகுதியினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**இராஜமாணிக்கம் கைம்பெண் முகிந்தினி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் 10462/12.02.2010ஆம் இலக்க உறுதியால் **அமலராஜ் ரஜனி** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**நிர்மலநாதன் விபுஷனன்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் 15058/25.08.2014ஆம் இலக்க உறுதியால் **அருமைநாயகம் ஆனந்தராஜ் பெண் முகிந்தினி மறுபெயர் முகுந்தினி** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**நவரத்தினம் சுபேந்திரனும் பெண் சிந்துஜாவும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் 16881/06.05.2024ஆம் இலக்க உறுதியால் **நிர்மலநாதன் விபுஷனனும் பெண் ஆதித்தியாவும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த **நவரத்தினம் சுபேந்திரனும் பெண் சிந்துஜாவும்** ஆகியவர்கள் குறித்த ஆதனத்தின் அடியுறுதிகளில் ஒன்றான பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட குறித்த 3719/28.12.2002ஆம் இலக்க உறுதியில் தாயுறுதியாக "3439" ஆம் இலக்க உறுதி என்பதற்கு பதிலாக தவறுதலாக "3459" ஆம் இலக்க உறுதி எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், குறித்த 3719 ஆம் இலக்க உறுதியின் சரியான தாயுறுதி "3439" இலக்க உறுதியே எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு ப.திலக்ஷனா முகதாவில் 2664/02.11.2024 ஆம் இலக்கத்தில் உறுதிப்படுத்தலும் வெளிப்படுத்தலும் உறுதியொன்றினை நிறைவேற்றியிருந்தார்கள்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர்: **"கன்னாட்டி"**
இறை: **அராலி தெற்கு**
விஸ்தீரணம்: **நில.பர.இலா 1 குளி 5**
எல்லைகள்: **கிழக்கு-** ஒழுங்கையும், சுதர்சன் பெண் தனுஷாவின் ஆதனமும், **வடக்கு-** டாக்டர் கனகரத்தினத்தின் ஆதனம், **மேற்கு-**திருமதி.துரைரத்தினத்தின் ஆதனம், **தெற்கு** பிரேமரத்தினம் பெண் பூவிமகளின் ஆதனம்

குறித்த **நவரத்தினம் சுபேந்திரனும் பெண் சிந்துஜாவும்** ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **நவரத்தினம் சுபேந்திரனும் பெண் சிந்துஜாவும்** ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/ செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை.** (5820)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுங்கள்

## பெற்றோர்கள் கவனயீர்ப்பு

(தருமபுரம்)

**பாடசாலையின் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வலியுறுத்தி கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்திற்குட்பட்ட புளியம்பொக்கனை கலவெட்டித்திடல் நாகேஸ்வர வித்தியாலய மாணவர்களின் பெற்றோர்கள் பழையமாணவர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



நேற்றுக் காலை பாடசாலை நுழைவாயிலை மறித்து கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பெற்றோர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் மாணவர்களும் வகுப்பறைக்கு செல்லாது நுழைவாயிலில் காத்திருந்தனர்.

குறித்த இடத்திற்கு கிளிநொச்சி வடக்கு வலய திட்டமிடல் பிரதிக்கல்விப்பணிப்பாளர் வருகை தந்து பெற்றோர்களுடன் கலந்துரையாடி விடுமுறை நிறைவடைந்ததும் ஆசிரியர் வெற்றிடம் நிரப்புவதற்குரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது. (8-316)

# பகிரங்க அறிவித்தல்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் சான்றுப்பொருட்களாகப் பாரப்படுத்தப்பட்டு இன்றுவரை உரிமை கோரப்படாத படகுகள், படகின் இயந்திரங்கள், வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகள் என்பவற்றை அலுவகை நாட்களில் பதிவாளரைத் தொடர்பு கொண்டு மேற்படி சான்றுப் பொருட்கள் தொடர்பான உரிமையை உரிய ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்திப் பெற்றுக் கொள்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் தவறும் பட்சத்தில் குறித்த சான்றுப்பொருட்கள் குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவையின் 432 ஆம் பிரிவின் பிரகாரம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

(பருத்தித்துறை

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் சான்றுப் பொருட்களாக பாரப்படுத்தப்பட்டு இன்றுவரை உரிமை கோரப்படாத கீழுள்ள பட்டியலில் இலக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ள துவிச்சக்கர வண்டிகளை அலுவகை நாட்களில் பதிவாளரைத் தொடர்பு கொண்டு துவிச்சக்கர வண்டி தொடர்பான உரிமையை ஒரு மாத காலத்திற்குள் உரிய ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்திப் பெற்றுக் கொள்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும். தவறும் பட்சத்தில் குறித்த சான்றுப் பொருட்கள் குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவையின் 432 ஆம் பிரிவின் பிரகாரம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனப் பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

1. இலக்கமற்ற ஆண்கள் துவிச்சக்கரவண்டி ஒன்று
2. இலக்கமற்ற பெண்கள் துவிச்சக்கரவண்டி ஒன்று
3. ஆண்கள் துவிச்சக்கரவண்டி இலக்கம் 57183960 ஒன்று
4. ஆண்கள் துவிச்சக்கரவண்டி இலக்கம் 68236256 ஒன்று
5. பெண்கள் துவிச்சக்கரவண்டி இலக்கம் 69965207 ஒன்று
6. ஆண்கள் துவிச்சக்கரவண்டி இலக்கம் ESP 1073 ஒன்று
7. ஆண்கள் துவிச்சக்கரவண்டி இலக்கம் AP 700351 ஒன்று
8. ஆண்கள் துவிச்சக்கரவண்டி இலக்கம் 56062207 ஒன்று
9. பெண்கள் துவிச்சக்கரவண்டி இலக்கம் 55429382 ஒன்று
10. ஆண்கள் துவிச்சக்கரவண்டி இலக்கம் 55620728 ஒன்று
11. ஆண்கள் துவிச்சக்கரவண்டி இலக்கம் 57194289 ஒன்று (பார் இல்லாத துவிச்சக்கரவண்டி)
12. ஆண்கள் துவிச்சக்கரவண்டி இலக்கம் DU 1470 ஒன்று

# இணுவில் அறிவாலயத்தில் முழுநிலாக் கலையரங்கம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் அறிவாலயத்தில் இன்று புதன்கிழமை மாலை 5 மணி அளவில் சிறுவர்கள் பங்குகொள்ளும் சிறப்புப் பண்ணிசைப் பாடல்கள் மற்றும் கதாப்பிரசங்க நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

அத்துடன் விருது பெற்றவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும், செம்முகம் ஆற்றுகைக் குழு க.சீலனின் இயக்கத்தில் 'தேவை' குறு நாடகமும் இடம்பெறும்.

அறிவு அறக்கட்டளை, பெரிய பிரித்தானியா அனுசரணையில் மேற்படி நிகழ்வுகள் நடைபெறுகின்றமை என்பது குறிப்பிடத்தக்கது. (8)

# கௌரவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு தேசிய வெளிக்கள நிலையம் நடத்தும் 2025 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வடமாகாண கல்வி வலயங்களில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இல.133, செம்மணி வீதி, நல்லூரில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக தாவரவியல்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி நாமகள் கிருஸ்ணபிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை வலயக்கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா கலந்து கொள்ளவுள்ளார். (3)

# செல்லப்பாசுவாமி குருபூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை நிகழ்வு நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் இன்று புதன் கிழமை நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு திருமுறை, நற்சிந்தனைப் பாடல்கள் இடம்பெறும்.

தொடர்ந்து, "நோய்நீக்கம்" எனும் தலைப்பில், சைவப் புலவர் சு.தேவமனோகரன் உரையாற்றவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (8)

# திருநெல்வேலி அநுராகம் கவின் கலை மாணவர்களின் ஆற்றுகை விழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி அநுராகம் கவின் கலை நிலையம் நடத்தும் கவின் கலை மாணவர்களின் ஆற்றுகை விழா யாழ்/ இந்துக்கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யா/ இந்துக் கல்லூரி உதவி அதிபர் சிவநாதன் பரணீதரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி சிவசுப்பிரமணியம் ரகுபரன், திருமதி யாழினி ரகுபரன் ஆகியோர் பிரதம அதிதிகளாகவும், இணுவில் தர்ம சாஸ்தா வீணை இசைக் கலைஞர் சிவஸ்ரீ. மஹாதேவ சோமசுந்தரக்குருக்கள் சிறப்பு அதிதியாகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடபீடாதிபதி சிவஸ்ரீ. பத்பநாபக் குருக்கள் கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அநுராகம் மாணவர்களின் வாய்ப்பாட்டு இசை, வீணை குழு இசை, வயலின் குழு இசை நிகழ்வுகளைத் தொடர்ந்து மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. அநுராகம் கவின் கலை நிலைய பொறுப்பாசிரியர் விஜயபாரதி வெங்கடேஸ்வரனின் நன்றியுரையும் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

# தென்மராட்சி இலக்கிய அணி நடத்தும் பாரதி விழா

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி இலக்கிய அணி நடத்தும் பாரதி விழா எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு சாவகச்சேரி தென்மராட்சி கலைமன்றத்தில் நடைபெறவுள்ளது.

உடுவில் வலிதெற்கு பிரதேச செயலாளர் திருமதி பிரேமினி பொன்னம்பலம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் எழுத்தாளர் நா.துஷாந் தம்பதியர் மங்கள விளக்கேற்றவுள்ளதுடன் கடவுள் வாழ்த்தினை திருமதி நாமகள் நேரிந்தன் நிகழ்த்தவுள்ளார்.

இந்நிகழ்வில் கவிஞர் த.நாகேஸ்வரனின் அஞ்சலியுரையினை கம்பநேசன் அ.வாசுதேவா ஆற்றவுள்ளதுடன் தென்மராட்சி இலக்கிய அணித் தலைவர் சோ.கோகுலன் மேடை நெறியாள்கை நிகழ்த்தவுள்ளார்.

கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள் நடுவராகப் பங்குபற்றும் 'பாரதியிடமிருந்து இன்றைய அரசியலாளர்கள் கற்றுக் கொள்ள வேண்டியது இனப்பற்றையே! தேசப்பற்றையே!' எனும் தலைப்பிலான பட்டிமன்றத்தில் இனப்பற்றையே என ச.லலீசன், வே.ஞான சம்பந்தன் மற்றும் ந.சர்வேஸ்வரா ஆகியோரும் தேசபற்றையே என ந.விஜயசுந்தரம், பரா.ரதீஸ் மற்றும் த.கருணாகரன் ஆகியோரும் தங்கள் வாதங்களை முன்வைக்கவுள்ளனர். (8)

# சங்கடஹர சதுர்த்தி



(யாழ்ப்பாணம்)

யாழ். வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டபப்பூஜை நடை பெற்று விநாயகப்பெருமான் திருவீதி வலம் வருவார் என ஆதீன கர்த்தாவும், பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ து. விவே கானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண சுற்றுலாத்துறை விருதுகள் -2024/2025

▶ **Celebrating Excellence in Tourism of the Northern Province**

பிராந்திய சுற்றுலாத்துறையின் தரத்தையும் வளர்ச்சியையும் முன்னெடுக்கும் விதத்திலமைந்த விசேஷமான பங்களிப்புக்களை கௌரவிக்கும் முகமாக வடக்கு மாகாண சுற்றுலாப்பணியகமானது வடக்கு மாகாண சுற்றுலாவிருதுகள் 2024-2025 இற்கான விண்ணப்பங்களைப் பெருமையுடன் கோருகின்றது. இவ் விருதுகள் வடமாகாணத்தின் சுற்றுலா வளர்ச்சி, தரம் மற்றும் சேவைக்கு சிறப்பாக பங்களித்தவர்களை கௌரவிக்கும் வகையில் வழங்கப்படுகின்றது.

▶ **விருது பிரிவுகள் (Award Categories)**

**1. வடக்கு மாகாணத்தின் சிறந்த சுற்றுலா வழிகாட்டி விருது (ஆண்,பெண்)**

மாகாணத்தின் பண்பாடு ,பாரம்பரியம்,அழகு இவற்றைச் சிறப்பாக எடுத்தியம்பும் அதி சிறப்பான சுற்றுலா வழிகாட்டிகளுக்கான அங்கீகாரம்.

**விண்ணப்பிப்பதற்கான தகுதிகள் :-**

- குறைந்த பட்சம் இரண்டு (2) ஆண்டுகள் வடக்கு மாகாணத்தில் சுற்றுலா வழிகாட்டியாகப் பணிபுரிந்திருக்க வேண்டும்.
- குறைந்தது பத்து (10) சுற்றுப்பயணங்களை மாகாணத்திற்குள் நடத்தி யிருக்க வேண்டும்.

**2. வடக்கு மாகாணத்தின் சிறந்த தங்குமிட வழங்குநர் விருது**

வடமாகாணத்தில் தங்குமிட வழங்குநரிடையே உயர்தரமான விருந்தோம்பல் மற்றும் தங்குமிட சேவைகளை வழங்குவோரை கௌரவித்தல்

விருது பிரிவுகள்

- Hotel - ஹோட்டல்
- Guest House - விருந்தினர் விடுதி
- Bungalow - விருந்தினர் மாளிகை
- Home Stay - வீடுகளில் தங்குமிடங்களை வழங்குவோர்
- Camping Site - முகாமிடல்

**விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்:**

- வடக்குமாகாணத்தில் அமைந்த தங்குமிட சேவை வழங்குநராக இருக்க வேண்டும்.
- இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் அல்லது பதிவு செய்ய விண்ணப்பித்திருக்க வேண்டும்.
- குறைந்தபட்சம் ஒரு (1) வருடம் தொடர்ச்சியாக இயங்கிக்கொண்டிருக்க வேண்டும்.
- உள்ளூராட்சி சபையில் செல்லுபடியாகும் பதிவைப் பெற்றிருக்க வேண்டும்.
- கடந்த வருடத்தில் முந்திய ஆண்டில் குறைந்தது 100 விருந்தினர் இரவுகளைப் பதிவு செய்திருக்க வேண்டும்.
- கடந்த 12 மாதங்களில் பாரியபுகார் அல்லது விதி மீறல் பதிவுகள் இல்லாமல் இருக்க வேண்டும்

**3. வடக்கு மாகாணத்தில் சிறந்த நலன்சார் சுற்றுலா (Wellness Tourism) வழங்குநர் விருது**

ஆரோக்கியம், புத்துணர்ச்சி மற்றும் பரிபூரண நலன் ஆகியவற்றை முன்னெடுத்தலில் சிறந்து விளங்குவோரைக் கொண்டாடுதல்.

**விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்:**

- வடக்குமாகாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் நலன்சார் சுற்றுலா நிறுவனமாக இருக்க வேண்டும். (உ-ம் Spa , அரச மருத்துவ நிலையங்கள், யோகா மையங்கள், ஆரோக்கிய மையங்கள் Wellness Centre)
- குறைந்தபட்சம் 12 மாதங்கள் தொடர்ச்சியாக இயங்கிக்கொண்டிருக்க வேண்டும்.
- உள்ளூர் அல்லது வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு சேவை வழங்குநராக இருக்க வேண்டும்.
- சுகாதாரம், அளிக்கப்படும் சேவைகள் சேவையாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட சுகாதார, பாதுகாப்பு மற்றும் தொழில்முறை தரச்சட்டங்களுக்கேற்ப இயங்க வேண்டும். (உ-ம்: உரிமம் பெற்ற ஆயுர்வேத வைத்தியர்கள், பயிற்றப்பட்ட சிகிச்சை வழங்குநர்கள்,சான்றளிக்கப்பட்ட யோகா ஆசிரியர்கள்)

**4. வடக்கு மாகாணத்தின் சிறந்த உணவு மற்றும் பானத்திற்கான சுற்றுலா விருதுகள்**

**பிரிவு 1: வடக்கு மாகாணத்தின் சிறந்த பாரம்பரிய உணவு வழங்குநர் விருது**

**விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்:**

- வடக்குமாகாணத்தில் இயங்கும் நிறுவனமாக இருக்க வேண்டும்.
- பிரதானமாக பாரம்பரிய வடக்கு உணவுகளை வழங்க வேண்டும். ( உ-ம் -ஒடியல்கூழ், யாழ்நண்டு குழம்பு, பிட்டு, வடை, தோசை, பனங்கிழங்கு சார்ந்த உணவுகள்)
- உள்ளூர் மூலப் பொருட்கள் மற்றும் பாரம்பரிய சமையல்முறைகளைப் பயன்படுத்த வேண்டும்.
- உணவகம், ஹோம்ஸ்டே, விருந்துமனை, உணவுக்கடை அல்லது கேட்டரிங் சேவை ஆகியனவாக இருக்கலாம்.

**பிரிவு 2: பிற(சர்வதேச கலப்பு) உணவு வழங்குநர் விருது**

**விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்:**

- வடக்கு மாகாணத்தில் இயங்க வேண்டும்.
- சர்வதேச அல்லது கலப்பு வகை உணவுகள் வழங்கப்பட வேண்டும்.
- உணவகம், கஃபே, பேக்கரி அல்லது உணவு வண்டி ஆகியவையாக இருக்கலாம்.

**பிரிவு 3: சிறந்த பழச்சாறு/ பானங்கள்**

**விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்:**

- வடக்கு மாகாணத்தில் இயங்க வேண்டும்.
- உள்ளூர் பழங்கள் - மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பானங்களை வழங்க வேண்டும். (உ-ம்: பனம்பழப் பானம் , நெல்லி, இளநீர்,பழப்பானங்கள் ) சுகாதார மற்றும் சிறந்த சீரமைப்புப்புத் தரத்தை பின்பற்ற வேண்டும்.

**5. வடக்குமாகாணத்தின் சிறந்த உள்நாட்டு சுற்றுலா ஒழுங்கமைப்பாளர் விருது (In bound tour operator)**

**விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்:**

- இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்ட உள்நாட்டு சுற்றுலா நிறுவனம் ஆக இருக்க வேண்டும்.
- கடந்த 12 மாதங்களில் குறைந்தது 10 உள்நாட்டு குழு அல்லது தனிநபர் சுற்றுப் பயணங்களை வடக்குமாகாணத்திற்கு நடத்தியிருக்க வேண்டும்.
- உள்ளூர் சேவை வழங்குநர்களுடன் (வழிகாட்டிகள், ஹோட்டல்கள், போக்குவரத்து, சமூகங்கள்) இணைந்து செயற்பட வேண்டும்.
- கடந்த 12 மாதங்களில் எந்த முக்கிய புகார்களும் இல்லாது இருக்க வேண்டும்.

**6. வடக்குமாகாணத்தின் சிறந்த போக்குவரத்து சேவை வழங்குநர் (முச்சக்கரவண்டி - டாக்சி) விருது**

**விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்:**

- வடக்குமாகாணத்தில் பிரதானமாக இயங்க வேண்டும்.
- செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் மற்றும் போக்குவரத்து அனுமதி பெற்றிருக்க வேண்டும்.
- வாகனம் பதிவு செய்யப்பட்டு காப்பீடு செய்யப்பட்டு நன்றாக பராமரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.
- கடந்த 12 மாதங்களில் உள்ளூர் அல்லது வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு சேவை வழங்கியிருக்க வேண்டும்.
- புகார், தவறான கட்டணம் அல்லது ஒழுங்கு மீறல் இல்லாமல் இருக்க வேண்டும் அல்லது வடக்கு மாகாண சுற்றுலா பணியகத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பது விரும்பத்தக்கது.

**7. வடக்குமாகாணத்தின் சிறந்த சூழல் நட்புறவான நினைவுப் பொருட்களை உருவாக்கும் தொழில்முனைவோருக்கான விருது.**

உள்ளூர் பொருட்களால், சுற்றுச்சூழல் நட்பாக நினைவுப் பொருட்களை உருவாக்கும் படைப்பாற்றல் மிக்க தொழில்முனைவோருக்கான விருது.

**விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்:**

- வடக்குமாகாணத்தில் வசிப்பவராகவோ அல்லது பதிவு செய்யப்பட்ட தொழிலாகவோ இருக்க வேண்டும்
- மறுசுழற்சி செய்யக்கூடிய அல்லது சூழல் நட்புறவான பொருட்களைப் பயன்படுத்தி தயாரிப்புக்களை உருவாக்க வேண்டும். (இறக்குமதி பொருட்கள் அல்ல)
- குறைந்தது 12 மாதங்கள் இயங்கியிருக்க வேண்டும்.
- நிலைபேறான உற்பத்திப் பொறிமுறைகள் இருக்க வேண்டும்.
- குழந்தைத் தொழிலாளர்கள், கலாசார துஷ்பிரயோகம் மற்றும் ஆபத்தான பொருட்கள் பயன்படுத்தாமல் இருக்க வேண்டும்.

**8. வடக்குமாகாணத்தின் சிறந்த நினைவுப் பொருள் தொழில்முனைவோர் விருது.**

உள்ளூர் கைவினை மற்றும் நினைவுப் பொருள் உற்பத்தியில் சிறந்து விளங்கும் தொழில்முனைவோரை கௌரவிக்கிறது.

**விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்:**

- வடக்குமாகாணத்தில் அடிப்படை கொண்ட தொழில்முனைவோராக இருக்க வேண்டும்.
- குறைந்தது இரண்டு (2) ஆண்டுகள் தொழிலை நடத்திவர வேண்டும்.
- தயாரிப்புகள் வடக்குமாகாணத்தில் தயாரிக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு விற்பனை செய்யப்பட வேண்டும்.
- சட்டபூர்வமான மற்றும் நெறிமுறைப்படி பதிவு செய்யப்பட்ட தொழிலாக இருக்க வேண்டும்.

**9. வடக்குமாகாணத்தின் சிறந்த அனுபவம் பகிரும் தொழில்முனைவோர் விருது**
**Best experience sharing entrepreneur in tourism sector**

**விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்:**

- வடக்குமாகாணத்தில இயங்கும் தொழிலாக இருக்க வேண்டும்.
- குறைந்தது இரண்டு (2) ஆண்டுகள் தொடர்ச்சியாக சுற்றுலா அனுபவங்களை வழங்கி வர வேண்டும்.

**10. வடக்குமாகாணத்தின் சிறந்த சுற்றுலாத்தல முகாமைத்துவத்தினை வழங்கும் உள்ளூர் அதிகாரசபை**

சுற்றுலாத்தலங்களை நிலையான, பாதுகாப்பான மற்றும் ஈர்க்கக்கூடிய இடங்களாக மாற்றியுள்ள உள்ளூராட்சி அமைப்புகளைக் கௌரவிக்கின்றது.

**விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்:**

- வடக்குமாகாண மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேசசபையாக இருக்க வேண்டும்.
- குறைந்தது இரண்டு (2) ஆண்டுகள் சுற்றுலா மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும்.
- சுற்றுச்சூழல், நிதி மற்றும் நிர்வாக விதிமுறைகளை நிரூபிக்கும் ஆவணங்கள் (அறிக்கைகள், புகைப்படங்கள், சாட்சிகள்) சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

▶ **விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய கடைசிநாள்:** 16.11.2025

▶ **விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ள** - A9 வீதி,சுற்றுலாப்பணியகம்,வடக்கு மாகாணம். **அல்லது அதிகாரபூர்வ இணையத்தளம்**- tourismnorth.lk இனை நாடவும்.

▶ **தொடர்புகளுக்கு :** 021 221 7311

▶ **மின்னஞ்சல் :** tourismnorth.srilanka@gmail.com

**"வடக்குமாகாணத்தை சிறந்த சுற்றுலாப்பிராந்தியமாக மாற்றியமைக்க பாடுபடுவோரை நாம் கௌரவிப்போம்"**

(C-4252)

**பணிப்பாளர், சுற்றுலாப்பணியகம், வடக்கு மாகாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## நேபாளத்தில் பனிச்சரிவு 7 பேர் உயிரிழப்பு



(காத்மாண்டு)

நேபாளத்தில் ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கி 7 பேர் பலியாகியுள்ளனர்.


வடகிழக்கு நேபாளத்தின் யாலுங் ரி சிகரம், பாக்மதி மாகாணத்தின் டோலாகா மாவட்டத்தின் ரோல்வாலிங் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது.

இங்குள்ள சிகரத்தில் ஏற்பட்ட பனிச்சரிவில் வெளிநாட்டைச் சேர்ந்த மலையேறுபவர்கள் உட்பட சுமார் 7 பேர் பலியாகினர். மேலும் 4 பேர் காயமடைந்தனர். .

5,630 மீற்றர் உயரமுள்ள இந்தச் சிகரத்தின் அடிப்படை முகாமில் பனிச்சரிவு ஏற்பட்டதில் மேலும் நான்கு பேர் காணாமல் போயுள்ளதாக தெரியவந்துள்ளது.

வெளிநாட்டை சேர்ந்தவர்கள் யார் என்பது குறித்த அடையாளங்கள் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. (நி)

## உரோமில் இடிந்து விழுந்த கோபுரம்!



(உரோம்)

உரோமின் கொலோசியம் அருகே நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஒரு கோபுரம் இடிந்து வீழ்ந்துள்ளது.

இதனால், இடிபாடுகளுக்குள் மணிக்கணக்கில் சிக்கிய ஒரு ருமேனிய தொழிலாளி இறந்துவிட்டதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்தன.

திங்கட்கிழமை இரவு அவசர சேவைகளால் அந்த நபர் மீட்கப்பட்டு ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாக உரோம் காவல்துறைத் தலைவர் லம்பேர்டோ கியானினி தெரிவித்தார்.

இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்ட மூன்று பேரில் மற்றொரு தொழிலாளி ஸ்ட்ரோயிசி ஒரு ருமேனிய நாட்டவர் என்றும், ஒருவர் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் உரோமானிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து உரோம் வழக்கறிஞர் அலுவலகம் விசாரணையைத் தொடங்கியுள்ளது. (நி)

# கட்டடங்களை

# பின்வாங்க

## ஈரான் ஜனாதிப

**(டெஹ்ரான்)**•••••••••••••••

**அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் சேதமடைந்த அணுசக்தி மையங்களை முன்பை விட அதிக வலிமையுடன் மறு கட்டமைக்கவுள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது.**

அமெரிக்கா மற்றும் ஈரான் மீண்டும் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என மத்தியஸ்தராக செயற்படும் ஓமன் வலியுறுத்திவரும் சூழலில் ஈரான் இவ்வாறு தெரிவித்துள்ளது.

ஈரான் அணுசக்தி திட்டங்கள் தொடர்பாக ஏற்கெனவே இரு நாடுகளிடையே ஐந்து சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெற்ற நிலையில், 6 ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு முன்பாக ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது.

இதனால் 6 ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சூழலில் ஈரான் அணுசக்தி அமைப்பை அந்நாட்டு ஜனாதிபதி மசூத் பெஸெஷ்கியான் நேரில் சென்று பார்வையிட்டார்.

அதன்பிறகு அவர் வெளியிட்ட காணொளிப் பதிவில், "சேதமடைந்த அணுசக்தி தளங்களை முன்பை விட அதிக வலிமையுடன் மறுகட்டமைக்க வேண்டும்.

கட்டடங்களை அழிப்பதால் நாம்

## இனப்படுகொலை நடக்கவில்லை அமெரிக்க மிரட்டலுக்குப் பதிலடி




(நைஜீரியா)

நைஜீரியாவில் ஒரு திட்டமிட்ட கிறிஸ்துவ இனப்படுகொலை நடப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனாலட் ட்ரம்ப் கூறிய குற்றச்சாட்டை, அந்நாடு நிராகரித்துள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவில், திட்டமிட்ட கிறிஸ்துவ இனப்படுகொலை நடப்பதாக சமீபத்தில் ட்ரம்ப் குற்றஞ்சாட்டியிருந்தார்.


மேலும், இதை தடுக்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ...ா அழிப்பதால் ... மாட்டோம்!

## ...பதி எச்சரிக்கை



பின்வாங்க மாட்டோம் என்பதை உணர்த்த வேண்டும்.

இதை எவ்வாறு திறம்பட மேற்கொள்வது என ஈரான் விஞ்ஞானிகளுக்கு நன்கு தெரியும்" எனத் தெரிவித்தார்.

முன்னதாக, கடந்த ஜூன் மாதம் ஈரானின் அணு சக்தி மற்றும் இராணுவத் தளங்கள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் அந்நாட்டு விஞ்ஞானிகள் பலர் உயிரிழந்தனர்.

இதற்குப் பதிலடியாக இஸ்ரேல் நகரங்கள் மீது ஈரான் பதிலடித் தாக்குதல் நடத்தியது.

அதன்பிறகு அமெரிக்காவின் தலையீட்டுக்குப் பின் இரு நாடுகளும் ஜூலையில் தாக்குதலை நிறுத்திக் கொண்டன. (நி)

தவறினால், அந்நாடு மீது போர் தொடுக்க தயாராக இருக்குமாறு அமெரிக்க போர்த்துறைக்கு உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்திருந்தார்.

நைஜீரிய அரசு தெரிவித்திருப்பதாவது:


அனைத்து மதத்தினரும் எங்கள் நாட்டில் சமமாக நடத்தப்படுகின்றனர்.

எந்தவொரு குறிப்பிட்ட மதத்தவர் மீதும் இனப்படுகொலை எதுவும் மேற்கொள்ளவில்லை.


பயங்கரவாதம், கொள்ளை மற்றும் குற்றச் செயல்கள் உள்ளிட்ட சிக்கலான பிரச்சினைகளால், நாட்டில் வன்முறைகள் அதிகரித்து வருகின்றன.

நைஜீரியா ஒரு இறையாண்மை கொண்ட நாடு. தன்னிச்சையாக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது என்பதை அமெரிக்காவுக்கு நினைவுபடுத்த விரும்புகிறோம்.

பயங்கரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பு மற்றும் நைஜீரியாவின் பாதுகாப்பு நிலைமை குறித்த தவறான புரிதல்களை சரி செய்ய, அமெரிக்காவுடன் பேச்சு நடத்த தயாராக உள்ளோம் என அதில் கூறப்பட்டுள்ளது. (நி)



## 'ஹாட்பாட்' குளியல் சீனாவில் அறிமுகம்



(பீஜிங்)

சீனாவின் ஹெய்லாங்ஜியாங் மாகாணம் ஹார்பின் நகரில் உள்ள ஒரு ரெசார்ட்டில் பாரம்பரிய சீன மருத்துவ முறைப்படி ஹாட்பாட் குளியல் முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

5 மீற்றர் விட்டமுள்ள ஒரு வட்டவடிவ தொட்டியில் வெந்நீர் நிரப்பப்பட்டுள்ளது.

அது பார்வையாளர்களைக் கவர்கிறது.

ஒரு பிரிவு சிவப்பாகவும், மற்றொரு பிரிவு வெள்ளை நிறத்திலும் உள்ளது. அந்த தொட்டியில் சிவப்புப் பக்கம் உள்ள தண்ணீரில் மிளகாய், கத்தரிக்காய், முட்டைக்கோஸ் ஆகியவை நிரப்பப்பட்டுள்ளன.

வெள்ளை பக்கம் உள்ள பிரிவில் பால், சிவப்பு பேரீச்சம்பழம், பெர்ரி பழங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

இதுபோன்ற சூடான, சூப் போன்ற குளங்களில் பொதுமக்கள் மூழ்கி எழும் போது அவர்களுக்கு புத்துணர்வு கிடைக்கிறது என்று சீனாவிலிருந்து வெளியாகும் சவுத் சைனா மார்னிங் போஸ்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது இதுபோன்ற ஹாட்பாட் குளியலை மேற்கொள்ள சுற்றுலாப் பயணிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதுகுறித்து இந்த ரெசார்ட்டின் ஹாட்பாட் குளியல் பிரிவில் உள்ள ஊழியர் ஒருவர் கூறும் போது, "இந்த ஹாட்பாட் குளியல் தொட்டியில் சிவப்பு நிறத்தில் உள்ள நீர், உண்மையில் ரோஜா இதழ்களில் இருந்து உருவாகிறது.

தினமும் புதிய ரோஜா இதழ்களை அதில் கொட்டுவோம்.

மேலும், இங்கு பயன்படுத்தப்படும் மிளகாய்கள் லேசான காரமுள்ள வகையைச் சேர்ந்தவை.

இதில் குளிப்பவர்களின் இரத்த ஓட்டத்தை இந்த மிளகாய்கள் மேம்படுத்துகின்றன.

வெள்ளை நிறத் தொட்டியில் உள்ள பால், சருமத்தை ஈரப்பதமாக வைத்திருக்க உதவுகிறது" எனத் தெரிவித்தார். (நி)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



தமிழ் மக்கள் கூட்டணியின் தலைமைச் செயலகம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இல.58 இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அக்கட்சியின் செயலாளர் நாயகம் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது.
கட்சியின் பெயர்ப் பலகையை யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் திரைநீக்கம் செய்து வைத்தார். குறித்த நிகழ்வில் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (படம்-சிவசாந்தன்)

# யாழில் இன்று சுனாமி அனர்த்த ஒத்திகை

(கரணவாய்)

பருத்தித்துறையில் இன்று புதன்கிழமை சுனாமி அனர்த்த வெளியேற்றுகை ஒத்திகை இடம்பெற உள்ளதாகவும் மக்கள் அநாவசியமாக பதற்றமடைய வேண்டாம் எனவும் பிரதேச செயலாளர் ந.திருலிங்கநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகளாவிய ஒருங்கிணைந்த சுனாமி அனர்த்த வெளியேற்றுகை ஒத்திகை நிகழ்வு இன்று புதன்கிழமை இடம்பெற உள்ளது. சர்வதேச ரீதியாக இலங்கை உட்பட 28 நாடுகளில் கரையோர மாவட்டங்களில் இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட உள்ளது. இலங்கையில் யாழ்ப்பாணம், மாத்தறை, களுத்துறை, மட்டக்களப்பு ஆகிய நான்கு மாவட்டங்களில் நடைபெற உள்ளன.

அந்தவகையில், யாழ்ப்பாணத்தில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் ஜே/401 பருத்தித்துறை சுப்பர்மடம் கிராமத்தில் நடைபெற உள்ளது. இது தொடர்பில் ஏற்கனவே கிராமசேவை உத்தியோகத்தரால் அறிவிக்கப்பட்ட பொதுமக்கள் மற்றும் யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவர்கள் ஆகிய இரு பகுதியினரையும் பாதுகாப்பாக வெளியேற்றி யா/வட இந்து மகளிர் கல்லூரியில் தங்கவைப்பதற்கான வெளியேற்று ஒத்திகை நிகழ்வு நடைபெறவுள்ளது.

இது பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான ஒரு முன்னாயத்த ஒத்திகைக்கான பயிற்சி என்பதால் இப்பயிற்சி நடைபெறும் தினத்தில் பொதுமக்கள், பெற்றோர் எவரும் பீதியோ குழப்பமோ அடைய வேண்டாம் எனத் தெரிவித்தார். (8-60)



சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் அனுசரணையில் மீசாலை கிழக்கு சரஸ்வதி சிறுவர் கழகம் நடத்திய சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வுகள் கடந்த 31/10 வெள்ளிக்கிழமை பிற்பகல் மீசாலை கிழக்கு பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றன. (படம்:- சுபேசன்)

# 3200 போதை மாத்திரைகளுடன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரில் இளைஞர்களை இலக்கு வைத்துப் போதைப்பொருள் மாத்திரைகளை விற்பனை செய்யும் கும்பலைச் சேர்ந்த இருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இருந்து மூவாயிரத்து 200 போதை மாத்திரைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.



யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய கஸ்தூரியார் வீதியில் மோட்டார் சைக்கிளில் சந்தேகத்திற்கு இடமான முறையில் பயணித்தவர்களை சோதனையிட்ட போதே குறித்த நபர்கள் போதை மாத்திரைகள் வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

அதனை அடுத்து அவர்களைக் கைது செய்த பொலிஸார், அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் இருவரும் 21 வயதுடைய ஐந்து சந்தி பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

அத்துடன் சந்தேக நபர்கள் பத்து போதை மாத்திரைகள் அடங்கிய ஒரு அட்டையை சுமார் மூவாயிரம் ரூபா வரை விற்பனை செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளுக்குப் பின்னர் சந்தேக நபர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (8-33)



காங்கேசன்துறை உதயசூரியன் சனசமூக நிலையத்தினால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களிடையே வாசிப்புப் போட்டி காங்கேசன்துறை சந்தை வீதியில் அமைந்துள்ள உதயசூரியன் சனசமூக நிலைய மண்டபத்தில் தலைவர் பூ.பிரபாகர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (படம்:- மகாலிங்கம்)

# வாழ்வாதார உதவித்திட்டம் வழங்கி வைப்பு

(கரணவாய்)

யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தின் ஏற்பாட்டில் திருப்பூர் ஒன்றியம், மயிலிட்டியை சேர்ந்த அன்பர் ஒருவரின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது நிதி அனுசரணையில் முன்னாள் போராளி ஒருவருக்கு வாழ்வாதார உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டது.

புனர்வாழ்வு செயற்பாட்டின் பின்னர் விடுவிக்கப்பட்டு திருகோணமலை மாவட்டத்தில் வசித்து வரும் குடும்பஸ்தரான முன்னாள் போராளி ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபா பெறுமதியான சமையல் எரிவாயு இணைப்பில் பயன்படுத்த கூடிய றொட்டி கல்லுடன் கூடிய அடுப்பு மற்றும் சுடுநீர் போத்தல் என்பன வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

உணவகத் தொழிலில் ஈடுபட்டு வரும் குறித்த முன்னாள் போராளியின் வாழ்வாதாரத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் றொட்டி, பறோட்டா என்பவற்றை தயாரிப்பதற்கான இரும்பினால் ஆன அடுப்பு தொகுதி மற்றும் 3 லீற்றர் கொள்ளளவு உள்ள சுடுநீர் போத்தல் என்பன அவரது கோரிக்கைக்கு அமைவாக வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-60)



வவுனியா, பாவற்குளம் படிவம் 3, அரசடிக்குளம் கனிஸ்ர உயர்தர வித்தியாலயத்தின் ஸ்மாட் வகுப்பறைக்கான அடிக்கல்நாட்டும் நிகழ்வும் மைதானப் புனரமைப்புப் பணிகளும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஜெகதீஸ்வரனால் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. (படம்:- வசந்தரூபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைக் கற்றாளை இலை அழுகலும் நோய் கட்டுப்பாடும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

விவசாய உயிரியல் துறை ஆய்வு முடிவுகள் விவசாயிகளை நோக்கி... விவசாயிகள் மற்றும் விவசாயம்சார் தொழிற்றுறையினரின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் அவர்களது வேண்டுகோளுக்கிணங்க விவசாய உயிரியல் துறையில் எமது வழிகாட்டலில் மேற்கொள்ளப்பட்ட மாணவர்களின் ஆய்வுகளின் முடிவுகளும் நேற்றுமுன்தினம் பிரசன்னப்படுத்தப்பட்ட நிலையில் அந்த ஆய்வு முடிவுகளை விவசாயிகளினதும் விவசாயம்சார் தொழிற்றுறையினரின் நன்மை கருதி இங்கே தரமுனைந்துள்ளேன்.

அந்த வகையில் பரந்து பட்டு வடகிழக்கு மாகாணங்களில் பயிரிடப்பட்டுவரும் பிள்ளைக் கற்றாளை அதனது சதைப்பிடிப்பான இலைக்காக பிளாஸ்திக்கு கொள்கலன்களில் பரந்துபட்டு வளர்க்கப்படுகின்றன. பலவிவசாயிகள் நிலத்திலும் இதனை நடுகைசெய்து வருகின்றனர்.

பிள்ளைக்கற்றாளையை பலர் தற்போது தொழிற்றுறையாக வளர்த்துவரும் நிலையில் இயற்கை விவசாயம் (Nature Farming Pvt Ltd.) எனும் பெயர் கொண்ட நடுத்தர பொருளாதார குடும்பங்களை நோக்கியதாக இவர்களது பணி இருந்தாலும் அதிகமான அளவில் குடும்ப பெண்கள் இணைந்த குழுவாகக் கொண்டு வடகிழக்கில் இயங்கும் சமூக அமைப்பின் முழு முயற்சியின் பயனாக பல குடும்ப பெண் விவசாயிகள் பிள்ளைக் கற்றாளையை தமது வயற்காணிகளிலும் வீடுகளிலும் இருக்கும் இடங்களைப் பயன்படுத்தி வளர்த்து வருகின்றனர்.

பிள்ளைக் கற்றாளை கன்றுகளை வளர்த்து பயனாளிகளுக்கு வழங்குவதுடன் அவர்களுக்கான வளர்ப்பு முறைகளையும் ஆலோசனைகளையும் இந்நிறுவனம் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதற்காக அந்நிறுவனத்தில் பல பெண்கள் இணைக்கப்பட்டு ஆலோசகர்களாக பணி புரிகின்றனர். பிள்ளைக்கற்றாளை வளர்ப்பில் உள்ள தொழில்நுட்பத்தை கற்றுக்கொடுக்கும் இவர்கள் வளர்ப்பில் ஏற்படும் பிரச்சினைகளை தீர்க்கும் ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர்.

பிள்ளைக் கற்றாளையை அதன் சதைப்பிடிப்பான இலைக்காக அதிலுள்ள ஜெல் போன்ற பதார்த்தத்திற்காக வளர்க்கின்றார்கள். வெறுமனே இந்த ஜெல்லினை ஜூஸ் போன்ற மென்குடிபானங்கள் தயாரிப்பதற்கும் இதிலுள்ள மருத்துவ குணங்கள் காரணமாக மக்கள் அதனை விரும்பி குடிப்பதனையும் காணலாம். இந்த ஜெல் பலவகையான உணவு பானங்களில், உணவு பதார்த்தங்களில், தலைக்கு பயன்படும் எண்ணையில் என பலவகைகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த ஜெல் இற்கு மக்கள் மத்தியிலும் தொழிற்றுறைசார்ந்தும் அதிகமான கேள்வியிருப்பதனால் பலரும் ஆர்வத்தோடு பிள்ளைக் கற்றாளையை தங்களது மனைகளில் வளர்த்து வருகின்றனர்.

இதற்கான கன்றுகள் வடகிழக்கில் பல்வேறு இடங்களில் நாற்றுமேடையாக வளர்த்து அங்கிருந்து இளங்கன்றுகளை ஆர்வமுள்ளவர்களுக்கு இன்னும் மனைப் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக தமது வீடுகளில் பிள்ளைக் கற்றாளையை வளர்ப்புடன் அவற்றின் இலைகளை வளர்ப்பவர்களிடமிருந்து வாங்கி அந்தந்த குடும்பங்களின் குடும்ப வருமானத்திற்கு பங்களிப்பும் செய்து வருகின்றனர். ஒரு பெண்விவசாயி 500 தொடங்கி 1000 பிள்ளைக் கற்றாளை கன்றுகளை இவ்வாறான வழிமுறை மூலம் வளர்க்கின்றதனை இங்கே சுட்டிக்காட்டலாம்.


அந்தவகையில் வடகிழக்கில் பல்வேறுபட்ட பிரதேசங்களில் வளர்க்கப்படும் பிள்ளைக் கற்றாளையில் அழுகல் ஏற்பட்டதனை முதலில் அறியத்தந்து அதற்கான பரிகாரத்தையும் வேண்டிநின்றனர். பிள்ளைகற்றாளை இலையழுகல் என்பது தென்பகுதியில் கடந்த காலங்களில் பரந்தளவில் நோயேற்பட்டு பிள்ளைக்கற்றாளை அதிகமாக பாதிக்கப்பட்டிருந்ததனை அறிவித்திருந்த நிலையில் அதற்கான பரிகரணம் எதுவுமே இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஏனெனில் பிள்ளைக் கற்றாளையில் அழுகலை ஏற்படுத்துகின்ற நுண்ணங்கி ஒரு வகையான பக்ரீறியா ஆகும். எமது துறையில் செய்யப்பட்ட ஆய்வில் அந்த பக்ரீறியாவை தனியே பிரித்தெடுத்து நியூட்றியன் அகார் என்னும் ஊடகத்தில் வளர்த்து பல பரிசோதனைகளை செய்து முடித்துவிட்டோம். பக்ரீறியாவினால் ஏற்படுத்தப்படும் நோயின் தாக்கம் மிகவும் கொடியது.

பிள்ளைக் கற்றாளையில் ஏற்பட்ட பக்ரீறியா இலையழுகல் நோய் : இந்நோயை ஒருவகை டிக்கேயா கிறைசாந்தெமி எனப்படும் (Dickeya chrysanthemi ) பக்ரீறியா ஏற்படுத்துகின்றது. இந்நோயை ஏற்படுத்தும் பக்ரீறியா வெறுமனே தாவரத்தின் உள்ளே தானாக சென்றுவிடும் திறனற்றது. அதனால் இவற்றின் உட்புகுதலுக்கு தாவரப்பாகத்தில் காயமோ கீறலோ அல்லது உரசலோ ஏற்பட்டால் அதனூடாக இவ்வாறான பக்ரீறியாக்கள் உட்புகுந்து விரைந்து பெருகத் தொடங்கிவிடும். பக்ரீறியா உட்புகலோடு அந்த இடத்தில் விரைந்து பெருகி தாவரம் முழுவதும் பெருகிவிடும்.

இவ்வாறு பரவத்தொடங்கிவிட்டால் பின்னர் நோய் பரவலைக் தடுக்க முடியாது. அழுகிவரும் பாகங்களிலிருந்து பக்ரீறியா கலங்கள் வெளிவந்து நீருடன் பரவ ஆரம்பித்துவிடும். வயலும் வயல் சார்ந்த இடமாதலால் இவ்வாறான இடங்களில் நீரதிகம் காணப்படுவதனால் பொலித்தீனிலுள்ள துளைகளூடாக மேல்நோக்கி நீர்வர வாய்ப்புக்களும் உண்டு. இதனால் வேர்த்தொகுதி பாதிக்கப்பட்டு தாவரம் வாடல் நிலைக்கு சென்றுவிடும். இவ்வாறான பிரச்சினையுள்ள இடங்களில் “வரம்பும் வாய்க்காலும்” (Ridge and furrow) என்னும் உத்தியை பயன்படுத்தலாம். மாறாக அதிக நீர்த்தன்மை உள்ள இடங்களில் இவ்வாறான பயிர்ச் செய்கையை செய்வதனை தவிர்ப்பது என்றும் நல்லது. காலநிலை மாறி மழைவீழ்ச்சி பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் பெய்வது உகந்ததும் இல்லை. நிலம்பார்த்து பயிர்செய் என்பது இதனை மையப்படுத்திதான். பக்ரீறியா அழுகலுடன் வாடல் பரவத்தொடங்கினால் கட்டுப்படுத்துவது கடினம். அழுகலுக்குள்ளான பாகங்களை வெட்டியகற்றி அவற்றை ஆழகிடங்கினுள் போட்டு மூடிவிடுதல் நல்லது. நீரோட்டத்தில் பக்ரீறியா பரவுகின்ற காரணத்தினால் தொடர்ந்து நீர்ப்பகுதியான இடங்களை தவிர்த்து பிள்ளைக் கற்றாளை தாவரகொள்கலன்களை மாற்றி வைத்தல் நன்று.

வழமையாகவே பக்ரீறியாவை கட்டுப்படுத்துதற்காக மனிதர்கள் பயன்படுத்தம் அன்ரிபயோடிக்ஸ் தாவரங்களுக்கு பயன்படுத்த முடியாது. அதனால் இதுவரையில் இவ்வாறான பக்ரீறியாவைக் கட்டுப்படுத்த மருந்தேதுமின்றி பல பகுதிகளில் பிள்ளைக் கற்றாளை அழுகலுக்குட்பட்டு அழிந்து விட்டது. ஆனால் தற்போது செய்யப்பட்ட ஆய்வில் செப்பு சல்பேற்று மற்றும் சுண்ணாம்பு கலந்த கலவை 1: 1 வீதம் அதாவது ஒரு லீற்றர் நீரில் 0.9கிராம் செப்பு சல்பேற்று மற்றும் அதேயளவு சுண்ணாம்பு இரண்டையும் கலந்து தயாரிக்கும் கலவையை வடித்து கைத்தெளிப்பான் மூலம் விசிறுவதன் மூலம் இந்த பக்ரீறியாவை கட்டுப்படுத்தலாம் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.









தனியே செப்பு சல்பேற்று மட்டும் விசிறினாலும் பக்ரீறியா அழுகலை கட்டுப்படுத்தலாம் என்றாலும் அதனது செறிவினை நாம் கூட்டிவிட்டால் பிள்ளைக் கற்றாளை இலைகளில் பாதிப்பை ஏற்படுத்தும் என காண முடிந்தது. ஆதலால் செப்பு சல்பேற்றுடன் சுண்ணாம்பையும் கலந்து உருவாக்கும் கரைசலை விசிறும் போதும் இளம் கன்றுகளை தாய் தாவரத்திலிருந்து பிரித்து நடுகை செய்யும் போதும் இக் கரைசலை விசிறி நடுகை செய்தால் பக்ரீறியாவின் பெருக்கத்தை இலகுவாக கட்டுப்படுத்திவிட முடியும்.

முன்னெப்போதும் ஆய்வின் மூலமாக கண்டிராத இந்த முடிவு பிள்ளைக்கற்றாளை வளர்ப்போரின் இலையழுகல் பிரச்சினையை தீர்க்கும் வண்ணம் அமைந்துள்ளமை சிறப்புக்குரியதாகும். இந்நோய் பற்றியதும் அதனை கட்டுப்படுத்தவதற்குமான மேலதிய விபரங்களுக்கு கட்டுரையாளரை தொடர்புகொள்ளளாம்.

பல்கலைக்கழகத்தில் எம் மக்களின் பயிர்ச்செய்கைப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து அவர்களின் பிரச்சினைகளை ஆய்வாக செய்து இந்த முடிவு வெளிவந்திருக்கின்றது. எமது மக்களுக்கு மிகவும் பயன்தரத்தக்க இவ்வாறான ஆய்வுகள் நிச்சயமாக அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவுவதோடு பிள்ளைக் கற்றாளை பயிர்ச் செய்கையில் இருந்து வந்த பாரிய பிரச்சினைக்கும் தீர்வு காணப்பட்டுள்ளது. விவசாயபீடத்தின் அதிமுக்கியமான செயற்பாடுகளில் இவ்வாறான ஆய்வுகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு இல்லம் மெய்ப்பட (பகுதி 05)




**வீடு கட்டுவதற்கு முன் செய்ய வேண்டிய முக்கிய முன்னாயத்த திட்டமிடல்**

**1.0 அறிமுகம்: திட்டமிடலின் அவசியம்**

வீடு கட்டும்போது, மணல், சல்லி, கல் போன்ற கட்டுமானப் பொருட்கள் ஆரம்பத்தில் ஓர் இடத்தில் குவித்து வைக்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து வேறு இடத்திற்கு அடிக்கடி மாற்றப்படுவதைக் காணலாம். உதாரணமாக, கட்டுமானப் பொருள்கள் குவிக்கப்பட்ட இடத்தில் திடீரென மலசலக்கூடம் (கழிவறை) அல்லது செப்டிக் தொட்டி கட்ட வேண்டி வந்தால், அவற்றை உடனடியாக அப்புறப் படுத்த வேண்டியிருக்கும். இவ்வாறு, தெரியாமலேயே பொருட்களை **அள்ளிக் கொட்டுவதற்கும், மீண்டும் மாற்றுவதற்கும்** கூலி கொடுத்துக் கொண்டே இருப்போம். இத்தகைய திட்டமிடல் இல்லாத செயற்பாடுகள்:

- வீண் செலவுகளையும் (Unnecessary Labour Costs)
- வீண் தாமதங்களையும் (Delays)
- பொருள் விரயங்களையும் (Material Waste) ஏற்படுத்தி விடுகின்றன.

கட்டுமானத்தின் பொதுவான மதிப்பீடுகளில் (Estimates) இதுபோன்ற மாற்றுச் செலவுகள் உள்ளடங்குவதில்லை. இது கூலி ஒப்பந்தத்தில் வீட்டு உரிமையாளரையும், முழு ஒப்பந்தத்தில் ஒப்பந்தக் காரரையும் நேரடியாகப் பாதிக்கும். இதன் விளைவு, மொத்த கட்டுமானச் செலவில் **பெரிய அதிகரிப்பை** ஏற்படுத்தும்.

**இந்த நிலைமைகள் ஏன் ஏற்படுகின்றன?** இவற்றை எவ்வாறு கையாளலாம்? மற்றும் இந்த வீண் விரயங்களைத் தவிர்க்க என்னென்ன **முன்னாயத்த நடவடிக்கைகளை** எடுக்க வேண்டும்?

**2.0 வீடு கட்டுவதற்கு முன் செய்யவேண்டிய முக்கிய முன்னாயத்தங்கள்**

வீடு கட்டும் முன், பொதுவாக பின்வரும் விடயங்கள் தயார் நிலையில் இருக்கும்:

- வீட்டுக்கான **வரைபடம்** தயாராக இருத்தல்.
- வீட்டுக்குரிய **நிலையம்** (Site) பார்த்தல்.
- வீடு கட்டத் தொடங்குவதற்குரிய **நாளும் நேரமும்** பார்த்தல்.

மேற்கண்ட விடயங்கள் இருந்தாலும், இன்னும் சில **முக்கியமான திட்டமிடல்களை** முன்னாயத்தமாகச் செய்ய வேண்டும். இல்லையேல், நாம் அறியாமலே வீண் செலவுகளும், பொருள் விரயங்களும், தாமதங்களும் ஏற்படும்.

அதாவது, **நிரந்தர கட்டுமானம் வர வேண்டிய இடங்களை** நிலத்தில் துல்லியமாகக் குறித்துவிட்டு (Setting Out), மீதமுள்ள பகுதிகளைத் திட்டமிட வேண்டும்.

- தற்காலிக கொட்டகைகள் (Temporary Shed)
- மூலப்பொருள்கள் (கல், மணல்) வைக்க வேண்டிய இடங்கள்
- வேலைக்கான இடவசதி (Work Area)

இவற்றை ஆரம்பத்திலேயே குறிக்க வேண்டும். இல்லாவிட்டால், ஒரு இடத்தில் மணல்/சல்லி கொட்டப்பட்டு, பின்னர் அது கட்டுமானப் பகுதிக்குள் வருவதால், அதை அப்புறப்படுத்த இன்னொரு இடத்திற்கு அள்ளிப் போடத் தேவையற்ற கூலி கொடுக்க வேண்டி வரும். இத்தகைய சிறிய கூலிகள் மீண்டும் மீண்டும் செய்வதனால் **மிகப் பெரிய நிதிச் செலவினை** ஏற்படுத்தும்.

**3.0 நிரந்தர கட்டுமானம் குறித்தல் (Setting Out) மற்றும் தளத் திட்டமிடல்**

வீடு கட்டுவதில் ஏற்படும் குழப்பங்கள், தாமதங்கள் மற்றும் கூடுதல் செலவுகளுக்கு முக்கிய காரணம், கட்டுமானத் தளம் (Site) ஆரம்பத்திலேயே **திட்டமிடப்படாமல்** இருப்பதுதான்.

**3.1 நிலையான கட்டுமானம் வரையறுத்தல் (Setting Out):**

வீட்டின் அஸ்திவாரம் அல்லது சுவர்கள் **நிரந்தரமாக அமைய வேண்டிய இடங்களை,** வரைபடத்தின்படி, தளத்தில் துல்லியமாகச் **சுண்ணாம்பு அல்லது கயிறு** பயன்படுத்தி குறிக்க வேண்டும் (Setting Out). இதுவே வீடு அமையப் போகும் நிரந்தரமான பகுதி.

**3.2 வெளிப்பகுதி திட்டமிடல்:**

இந்த எல்லை நிர்ணயம் செய்த பின், **மீதமுள்ள வெளிப்பகுதி** (Setback Area, Open Space) தெளிவாகத் தெரியும். இந்த வெளிப்பகுதியைத்தான் **தற்காலிக தேவைகளுக்காகத் திட்டமிட** வேண்டும்.

**4.0 பொருட்களை வைப்பதற்கான திட்டமிடல் (Storage Planning)**

கல், மணல், சல்லி (Gravel/Aggregate) போன்ற மூலப்பொருட்களைக் குவிக்க வேண்டிய இடங்களை, வேலை நடக்கும் இடத்திற்கு அண்மையிலும், அதே சமயம் நிரந்தர கட்டுமானம் வராத இடமாகவும் ஆரம்பத்திலேயே திட்டமிட வேண்டும்.

மாறாக, தற்செயலாக ஒரு இடத்தில் மணலைக் கொட்டிவிட்டு, பின் அங்கே சுவர் வரவிருக்கிறது என்று தெரிந்து அதை அப்புறப்படுத்தினால், மணலை அள்ளி இன்னொரு இடத்திற்குக் கொண்டு செல்லத் **தேவையில்லாத கூலிச் செலவும்** மற்றும் நேர விரயமும் ஏற்படும். சரியான திட்டமிடல் மூலம் இந்தக் கூடுதல் செலவைத் தவிர்க்கலாம்.

**5.0 தற்காலிக பயன்பாட்டு ஏற்பாடுகள்**

**5.1 தற்காலிகக் கொட்டகை (Temporary Shed/Store):**

கட்டட வேலை செய்பவர்கள் தங்குவதற்கும், இரவு நேரங்களில் பொருட்கள், கருவிகள் மற்றும் சிமெண்ட் மூட்டைகள் போன்றவற்றை **மழையிலிருந்து பாதுகாப்பாக** வைப்பதற்கும் ஓர் இடத்தைத் தேர்வு செய்து, தற்காலிகக் கொட்டகையை அமைக்க வேண்டும். இந்தக் கொட்டகையும், நிரந்தர கட்டுமானம் முடிந்த பின் எவ்விதத்திலும் அப்புறப்படுத்தத் தேவையில்லாத ஓர் இடத்தில் அமைய வேண்டும்.

**5.2 தண்ணீர் வசதி (Water Supply):**

கட்டுமானத்திற்குத் தண்ணீர் அத்தியாவசியம். அருகிலுள்ள கிணறு, குழாய் கிணறு அல்லது குழாய் இணைப்பு மூலம் கட்டுமானப் பணிக்கான நீரை ஆரம்பத்திலேயே உறுதி செய்ய வேண்டும். தேவையான இடங்களில் தண்ணீர் சேமிப்புத் தொட்டிகளை (Temporary Water Tank) நிறுவுவதற்கான திட்டமிடல் அவசியம்.

**5.3 மின்சார வசதி (Power Supply):**

மின்சார உபகரணங்கள் பயன்படுத்துவதற்கும், இரவு வேலைகளுக்கும், தொழிலாளர்கள் பயன்படுத்தவும் மின்சாரம் அவசியம். கட்டுமானப் பணிக்காகத் தற்காலிக மின் இணைப்பு பெறுவதற்கான நடைமுறைகளை ஆரம்பத்திலேயே தொடங்கி, தளத்தில் பாதுகாப்பான மின் விநியோகத்தை உறுதி செய்ய வேண்டும்.

**6.0 தளச் சுத்திகரிப்பு மற்றும் சட்ட அனுமதிகள்**

**6.1 தளச் சுத்தம் மற்றும் சமன்செய்தல் (Site Clearance/ Levelling):**

வீடு கட்டத் தெரிவு செய்த நிலத்தில் உள்ள குப்பைகள், செடிகள், தேவையற்ற மரங்கள் மற்றும் கட்டுமானத்திற்கு இடையூறாக இருக்கும் பழைய கட்டமைப்புகள் ஏதேனும் இருப்பின், அவற்றை அகற்றி, தளத்தை முதலில் **சமப்படுத்த வேண்டும்.**

**6.2 கட்டட அனுமதி (Building Permits):**

வரைபடம் தயாரானாலும், உள்ளூராட்சி சபை (Local Authority) அல்லது உரிய அதிகாரிகளிடம் இருந்து கட்டுமானப் பணியைத் தொடங்குவதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதை மீண்டும் ஒருமுறை உறுதி செய்ய வேண்டும். அனுமதி இல்லாமல் வேலை ஆரம்பிப்பது சட்டச் சிக்கல்கள், அபராதம் மற்றும் கட்டுமான நிறுத்தத்தை ஏற்படுத்தி வீண் தாமதங்களை ஏற்படுத்தும்.

**7.0 முடிவுரை**

இந்த முன்னாயத்த திட்டமிடல் செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செய்வதன் மூலம், கட்டுமானப் பணி ஆரம்பம் முதல் நிறைவு வரை ஓர் ஒழுங்குடன் நடைபெறும். அத்துடன் திடீர் முடிவுகள் (Spot Decisions) மற்றும் அதன் விளைவாக வரும் வீண் கூலிச் செலவுகள் (Unnecessary Labour Costs), பொருள் விரயங்கள் (Material Waste) மற்றும் காலதாமதம் (Delays) போன்றவற்றை முழுமையாகத் தவிர்க்க முடியும். இந்தத் திட்டமிடல் கட்டுமானச் செலவுகளைக் கணிசமாகக் குறைத்து, குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் உங்கள் கனவு இல்லம் மெய்ப்பட உதவும்.

**இலங்கை பொறியியலாளர்கள் சங்கம், வடக்கின் அத்தியாயம்.**

# இராசிபலன்

05.11.2025
ஐப்பசி 19, புதன்கிழமை
பூரணை முன்னிரவு 7.41 மணி வரை

அச்சுவினி முற்பகல் 10.21 மணிவரை
சுப நேரம் 4.34-6.04 மணிவரை
இராகுகாலம் 12.04-1.34மணிவரை
ஐப்பசிப் பரணி, பூரணை விரதம்

சந்திராஷ்டமம்: அத்தம், சித்திரை

வளவன்


**மேஷம்**
எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், கனவுப் பலிதமுண்டு, உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.


**ரிஷபம்**
பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.


**மிதுனம்**
எண்ணிய காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறும் வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும்.


**கடகம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.


**சிம்மம்**
வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.


**கன்னி**
குடும்பப் பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், வாகனப் பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.


**துலாம்**
வெளியூர்ப் பயணங்களால் முன்னேற்றமுண்டு, திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தினரிடையே குதூகலம் ஏற்படலாம்.


**விருச்சிகம்**
பொது வாழ்வில் புகழ் கூடும், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டில் நம்பிக்கை கூடும், செய்தொழில் மேன்மையுண்டு.


**தனுசு**
இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.


**மகரம்**
பிறர்நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், பொருளாதாரத் தொடர்புகள் அனுகூலம் தரும்.


**கும்பம்**
நீண்ட நாளைய பிணக்குகளில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


**மீனம்**
எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுபகாரியச் செலவுகளில் முன்னேற்றம் காணும்நாள்.

**நோயின்றி வாழ நினையுங்கள். அடுத்தவரை நோகடித்து வாழ நினைக்காதிருங்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ சூரியனாக பிரகாசிக்க ஆசைப்பட்டால், நீ முதலில் சூரியனாக எரிய வேண்டும்.

~ அப்துல் கலாம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தீயவழியில் சென்று உங்களையும் அழித்து உங்கள் குடும்பத்தையும் அழிக்காதீர்கள்

**அறத்தால் வருவதே இன்பம்** என்கிறது நம் தமிழ்.

உலகில் எந்த மொழியும் இவ்வாறு அறத்தை வலியுறுத்தியிருக்குமா? என்றால் இல்லை என்பதே அதற்கான பதில்.

ஆம், அறத்தினின்று விலகி ஈட்டுகின்ற செல்வம் எதுவும் நமக்கு மகிழ்வை – நிம்மதியைத் தரமாட்டா. தவிர அத்தகைய செல்வம் பெருகுவது போல தோற்றமளித்தாலும் இருப்பதையும் அது இல்லாது செய்துவிடும்.

இங்குதான் அறத்தால் வருவதே இன்பம் என்ற தத்துவத்தை மீளவும் நாம் சிந்தித்தல் வேண்டும்.

இந்த சிந்தனையோடு எங்கள் நாட்டின் முன்னைய ஆட்சிகளில் நடந்தவற்றை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள்.

அரச சொத்துக்களைக் கபளீகரம் செய்தவர்களின் ஒரே நினைப்பு அந்த சொத்துக்கள் தங்களுக்கு மகிழ்வைத் தரும். நிம்மதியைத் தரும். சுகபோகத்தைத் தரும் என்பதாக இருந்தது.

அவர்கள் நினைத்ததுபோல மிகக் குறுகிய காலம் அந்த சுகானுபவம் அவர்களுக்குக் கிடைத்தது.

ஆனால் ஆட்சி மாறியது. காட்சியும் மாறுகிறது.

மாடமாளிகையில் இருந்து அவர்கள் வெளியேறுகின்றனர். அவர்கள் அபகரித்த சொத்துக்கள் மீளவும் அரச சொத்தாக மாறுகின்றன.

கைதுகளும் சிறையில் தடுத்து வைப்பும் நீதிமன்ற வழக்குகளுமாக அவர்களின் காலம் கடந்து போகிறது.

இதுமட்டுமா என்றால் இல்லை. இன்னும் என்னென்ன நடந்தாகுமோ என்ற ஏக்கம் அவர்களின் நிம்மதியை – தூக்கத்தை கெடுத்து விடுகின்றன.

ஆக, அறத்தை கடந்து சேர்க்கின்ற எதுவும் உரியவர்களை வாழவிடாமல் – உறங்கவிடாமல் சதா கொல்லும். அதுவே இப்போது நடந்தாகிறது.

இதை நாம் கூறுவதற்கு மூலகாரணம் நம் வடமாகாணத்தில் இப்போது போதைப் பொருட்கள் பெருமளவில் கைப்பற்றப்படுகின்றன.

போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் தாம் கட்டிய மாளிகையில் இருக்க முடியாமல், பாழடைந்த கட்டடங்களிலும் மனித நடமாட்டமற்ற இடங்களிலும் தஞ்சமடைகின்றனர்.

கூடவே அவர்களது குடும்பம் வேதனையில் தவிக்கிறது. சீ... இப்படியொரு வாழ்க்கையா என்று ஏங்குகின்ற அளவில் நிலைமை வந்துவிட்டது.

இங்குதான் அறத்தின் பாற்பட்டு பொருளீட்ட வேண்டும். அதுவே நிலைக்கும்.

மாறாக, மற்றதெல்லாம் அலைக்கும் – உலைக்கும் – வாழ்வைத் தொலைக்கும் கவனம்.

# போதைப்பொருள் மாபியாக்களை வடக்கில் இருந்து துரத்தியடிப்போம்

## அமைச்சர் சந்திரசேகர் உறுதி

போதைப்பொருள் மாபியாக்களை, குற்றச் செயல்களில் ஈடுபடும் தரப்புக்களை வடக்கு மண்ணில் இருந்து துடைத்தெறிவோம் எனக் கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் உறுதிபடத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகம் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலகம் இணைந்து நடத்திய நடமாடும்சேவை சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

போதைப்பொருள் விற்பனையாளர்கள், கஞ்சா கடத்துபவர்கள் மற்றும் வாள்வெட்டு குழுவினரால் யாழ்.மாவட்டம் சீரழிந்து வருகின்றது. எனவே இவற்றுக்கு முடிவு கட்டி, சமூக நிலைமையைத் தோற்றுவிக்குமாறு யாழ். மாவட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

தற்போது போதைப் பொருள் கும்பல் மற்றும் பாதாள குழு உறுப்பினர்களின் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு வருகின்றது.

போதைப்பொருளுக்கு எதிரான கூட்டு நடவடிக்கை நாடு தழுவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பாதாள குழுப் பின்னணியில் கறுப்பு நிர்வாகப் பொறிமுறையொன்றே உள்ளது. இதற்கு உதவும் சில நபர்கள் எல்லா இடங்களிலும் இருக்கவே செய்கின்றனர். இதன் பின்னணியில் கறுப்புப் பணம் புகுந்து விளையாடுகின்றது.

இந்நிலைமையை கண்டும்காணாததுபோல் இருக்க முடியாது. அது எமது இளைய தலைமுறையினருக்கு இழைக்கும் பெரும் துரோகமாகும். எனவே இந்த யுகத்துக்கு முடிவு கட்டப்படும். மக்களால் சட்டபூர்வமாக செயற்படும் அரசாங்கம் தான் நாட்டை ஆள வேண்டும். கறுப்பு உலகத்தால் நிர்வாகத்தை முன்னெடுக்க இடமளிக்க முடியாது.

மக்களுக்காக செயலாற்றுவதே எமது அரசாங்கத்தின் நோக்கம். ஊழல், மோசடிகளற்ற தூய நிர்வாகத்தை நோக்கிய பயணத்துக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். குறிப்பாக அரசாங்க ஊழியர்கள் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும். அரச ஊழியர்களுக்குரிய அத்தனை வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

போதைப்பொருளுக்கு முடிவு கட்டுவதற்குரிய சமர் ஆரம்பமாகியுள்ளது. இந்தச் சமரைக் கண்டு அஞ்ச வேண்டாம். அதற்கு பேராதரவு தாருங்கள். மக்களுக்கு தகவல்தெரியும் அதனை உரிய தரப்பினருக்கு அறிவியுங்கள். எதற்கும் அஞ்சவேண்டாம். இளைஞர்களே முன்வாருங்கள். உங்களுக்கு பின்னால் அரசாங்கம் நிற்கும். சண்டியர்களை நொண்டியர்களாக்குவோம் என்றார். (ம-7)

# செல்வச்சந்நிதியில் வள்ளி திருமணம்

வரலாற்றுச் சிறப்பு மிக்க முருக தலங்களுள் ஒன்றான தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வள்ளி அம்மன் திருக்கல்யாண வைபவமானது எதிர்வரும் வெள்ளிக்கிழமை சிறப்புற இடம்பெறவுள்ளது.

அதன்பிரகாரம் இரவு 10 மணியளவில் வள்ளி அம்மனுக்கும் முருகப் பெருமானுக்கும் திருக்கல்யாணம் நடைபெற்று முருகப்பெருமான் வள்ளியம்மையார் சமேதராய் தரிசனம் தரலும் திருவீதி வலம் எழுந்தருளலும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து கந்த புராண இறுதிப்படலமான வள்ளி திருமணம் பாராயணமும் கந்தபுராண படன பூர்த்தி நிகழ்வும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# வீதியோரத்தில் ஆபத்தான முறையில் பனைமரம்

## பயணிகள் அச்சம்

(அராலி)

யாழ்ப்பாணம், அராலி பாலத்தடியில் இருந்து அராலி அம்மன் கோவிலுக்கு செல்லும் 789 பேருந்து வழித்தட வீதியில் பனைமரம் ஒன்று ஆபத்தான முறையில் காணப்படுவதால் அச்சத்தின் மத்தியில் போக்குவரத்தில் ஈடுபட வேண்டியுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்தனர்.

வீதியோரத்தில் நிற்கும்குறித்த பனைமரத்தை இனந்தெரியாதவர்கள் அரைகுறையாக வெட்டிய நிலையில் அந்தப் பனைமரம்முறிந்து விழும் அபாயத்தில் காணப்படுகின்றது.

குறித்த வீதியால் சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கை எடுப்பதன் மூலம் ஆபத்துகளை தடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-7,104)

# முதிரை மரக்கடத்தல் பொலிஸாரால் முறியடிப்பு

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் உள்ள மரத்தளபாட நிலையத்திற்கு புதுக்குடியிருப்பு பகுதியில் இருந்து பெறுமதி வாய்ந்த முதிரை மரக்குற்றிகளை கடத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சி தருமபுரம் பொலிஸாரால் முறியடிக்கப்பட்டதுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் தருமபுரம் பொலிஸாருக்குக்கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே குறித்த அதிரடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (ம-7.316)

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை 01 - 30, 2025

‘ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும் தனது எதிர்கால சந்ததியினருக்காக மரங்களை நாட்ட வேண்டும்’



அலெக்சாண்டர் சிமித் (ஸ்கொட்லாந்துக் கவிஞர்)

# முன்பள்ளி சிறார்களுக்கான கதைகூறல் போட்டி நாளை

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, சாவகச்சேரிப் பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தினால் முன்பள்ளி மாணவர்களுக்கான சிறப்பான கதை கூறல் போட்டி நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வானது நாளை காலை 9.30 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நூலக எல்லைக்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களின் வாசிப்பு ஆர்வத்தையும், கதை சொல்லும் திறனையும் ஊக்குவிக்கும் நோக்குடன் இந்தப் போட்டி முன்னெடுக்கப்படவுள்ளது.

போட்டியில் பங்குபற்றும் பொருட்டு, நூலக எல்லைப் பரப்பிற்குட்பட்ட முன்பள்ளிகளில் இருந்து தலா இரண்டு சிறார்களை மாத்திரம் பங்குபற்றச் செய்யுமாறு நூலகர் முன்பள்ளி நிர்வாகங்களை கேட்டுக் கொண்டுள்ளார். (ம-7,30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ணத்தை சுவீகரித்தது இந்தியா




மகளிர் உலகக்கிண்ண இறுதிப் போட்டி நவி மும்பையில் நடைபெற்றது. இதில் இந்தியா, தென் ஆபிரிக்கா அணிகள் மோதின.

நாணய சுழற்சியில் வென்ற தென் ஆபிரிக்க அணி முதலில் பந்து வீச்சைத் தேர்வு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 298 ஓட்டங்கள் எடுத்தது. ஷபாலி வர்மா 87 ஓட்டங்களும், தீப்தி சர்மா 58 ஓட்டங்களும், ஸ்மிருதி மந்தனா 45 ஓட்டங்களும் எடுத்தனர்.

299 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இறங்கிய தென் ஆபிரிக்க அணி கப்டன் லாரா வால்வார்ட் நிலைத்து நின்று விளையாடி 101 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

மற்றைய வீராங்கனைகள் சீரான இடைவெளியில் ஆட்டமிழந்து வெளியேறினர்.

இறுதியில் 45.3 ஓவர்களில் 246 ஓட்டங்கள் எடுத்து தென் ஆபிரிக்க அணி ஆட்டமிழந்தது. இதனால் இந்திய அணி 52 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று முதல் முறையாக சம்பியன் பட்டம் வென்றது. (3)

## பருத்தித்துறை பிரதேசசபைக்குச் சொந்தமான ஏழு (07) நடமாடும் கடைகளும் மாதாந்த வாடகைக்கு வழங்குவதற்கான (03வருடங்கள்) கேள்வி அறிவித்தல் - 2025

1. கேள்வி விண்ணப்ப விநியோகக் காலம் :-06.11.2025-19.11.2025( முப9.00-பி.ப3.00 வரை)
2. கேள்வி மனுக்கள் ஏற்கும் இறுதித் திகதி :-20.11.2025 மு.ப. 10.00 மணி வரை
3. கேள்வி பத்திரம் திறக்கப்படும் திகதி :-20.11.2025 மு.ப. 10.00 மணி
4. கேள்வி விண்ணப்பங்களைப் பெற விரும்புவர்கள் அடையாள அட்டையைக் கொண்டு வருவதுடன் அதன் நிழற்படப்பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் மற்றும் குடும்ப வதிவிட அட்டையின் நிழற்படப்பிரதியையும் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன் கேள்விப்பத்திரக்கட்டணம் ரூபா1000.00, மீளளிக்கப்படும் வைப்புக்கட்டணம் ரூபா1500.00 என்பவற்றைச் செலுத்தி கேள்விப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.
5. கேள்விப் படிவங்கள் மூலப்பிரதி, இணைப்பிரதி என இருபிரதிகளில் தயாரிக்கப்பட்டு வெவ்வேறு தபால் உறையில் இடப்பட்டு கடித உறையினது இடது பக்க மேல் மூலையில் மூலப்பிரதி, இணைப்பிரதி மற்றும் கேள்வி விபரம் தெளிவாக எழுதப்படுவதுடன் மூடிய தபால் உறை மீது கையொப்பமிடப்பட்டு படிவங்கள் உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக **'தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி'** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுவதன் மூலமாகவோ சமர்ப்பிக்கமுடியும்.
6. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அல்லது சபையின் முன்னனுமதி பெற்று எழுத்து மூலமாக நியமிக்கப்பட்ட அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
7. கேள்வி திறக்கப்படும் நாளன்று ஆகக்குறைந்த கேள்வித் தொகையை விடக் குறைந்த கேள்வி இடுதல் அவதானிக்கப்படின் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படுவதுடன், கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படவும் மாட்டாது.
8. கறைநிறப் பட்டியலில்(Black List) காணப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. அவ்வாறு தவறுதலாக தங்களால் படிவம் பெறப்பட்டதாக கண்டறியப்படின் அக்கேள்விப்பத்திரம் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பின் தன்னியல்பாக இரத்தாகும்.
9. சித்திபெறும் கேள்விதாரர் மாத வாடகைப்பணத்தின் பன்னிரண்டு மாதங்களிற்கான பணத்தினை ஒரேதடவையில் முற்பணமாகச் செலுத்துவதுடன் அப்பணமானது மூன்றாமாண்டிற்கான வாடகைப் பணத்திற்காகச் சீர்செய்யப்படும்.மேலும் பாதுகாப்பு வைப்பாக ரூபா 100,000.00 செலுத்துதல் வேண்டும்.
10. 2025.11.20 ஆம் திகதி காலை10மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எந்தவித காரணத்தினாலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. எந்தவொரு கேள்விப்பத்திரங்களையும் எந்தவொரு கட்டத்திலும் எதுவித காரணமும் குறிப்பிடாது முழுவதுமாகவோ பகுதியளவாகவோ ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
11. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தாங்கள் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட கடிதம் பெற்றுக் கொண்ட திகதியிலிருந்து 07 நாட்களிற்குள் பாதுகாப்பு வைப்புத் தொகையை செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும் அத்துடன் சித்திபெறும் கேள்விதாரர் தாங்கள் சமர்ப்பித்த கேள்வித்தொகை மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளிற்கமைய முழுமையான குத்தகை காலத்திற்கும் (3வருடம் முழுவதும்) ஒப்பந்தம் செய்த கடையினை நடாத்துதல் வேண்டும். உடன்படிக்கையிலிருந்து இடைவிலக முடியாது. இடைவிலகினால்தங்களால் செலுத்தப்பட்ட பாதுகாப்பு வைப்புப்பணம் சபையினால் தங்களிற்கு மீளளிக்கப்படமாட்டாது. இருப்பினும் ஏற்புடைய காரணங்களினால் உடன்படிக்கையிலிருந்து இடைவிலகநேரிடின் விலகல் கோரிக்கையினை மூன்று மாதங்களிற்கு முன்னர் சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், காரணத்தினடிப்படையில் பாதுகாப்பு வைப்புப்பணம் மீளளிப்பது தொடர்பில் சபையினால் பரிசீலனை செய்யமுடியும்.
12. தங்களது ஒப்பந்தம் வலுவிலிருக்கும் காலத்தில் சபையிடம் கடையை மீள ஒப்படைக்கவேண்டிய விசேட தீர்மானமேதும் நிறைவேற்றப்படுமானால் அத்தீர்மானத்திற்குக் கட்டுப்படவேண்டிய கடப்பாடுடையவராக கருதப்படுகின்றீர். இச்சந்தர்ப்பத்தில் மூன்று மாத கால அவகாசம் சபையால் தங்களிற்கு வழங்கப்படும்.
13. தங்களால் நடாத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
14. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார வரிக்கட்டணத்தை வருடாந்தம் செலுத்தி வியாபார அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.
15. சமூக அமைப்புக்கள், கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவுச்சங்கங்கள் இக்கடைகளைப் பெற்றுக்கொள்ள விரும்பின் கேள்வி நடைமுறைகளிற்கமைவாக விண்ணப்பிக்கலாம்.
16. சமமான கேள்வித் தொகையினை ஒன்றிற்கு மேற்பட்ட கேள்விதாரர்கள் சமர்ப்பிக்கும் பட்சத்தில் பருத்தித்துறை பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தை நிரந்தரமாகக் கொண்டவர்களிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
17. இக்கடைகள் பிரதேச வாழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டவை. ஆதலால் பிறிதொரு கடைக்கு உரிமையாளராக உள்ள கேள்விதாரரிற்கு இக்கடை வழங்கப்படமாட்டாது.
18. கடைகளின் மாதாந்த வாடகைப்பணத்தை அடுத்துவரும் மாதத்தின் 10ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறின் வாடகைப்பணத்தின் 10% இனைத் தண்டப்பணமாக செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இருமாதங்களிற்கு வாடகைப்பணத்தைச் செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் தன்னியல்பாகவே இரத்துச் செய்யப்பட்டதாகக் கருதப்படும்.
19. இந்நிபந்தனைகளிற்கு மேலதிகமாக தெரிவு செய்யப்பட்ட வாடகைதாரர் சபையில் செய்து கொள்ளப்படும் வாடகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளிற்கும் கட்டுப்படவேண்டிய பொறுப்புடையவராகின்றார்.
20. இதர மேலதிக விபரங்கள்,நிபந்தனைகள்,கட்டுப்பாடுகள் தொடர்பான விளக்கங்களை அலுவலக நேரத்தில் பருத்தித்துறை பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நேடியாகவோ அல்லது 0212263276 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ பெற்றுக்கொள்ளமுடியும்.

| தொ. இல | கடை இலக்கம் | ஆகக் 'குறைந்த கேள்வித் தொகை(வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 01 | இலக்கம்-01 | 3000.00 | 1500.00 |
| 02 | இலக்கம்-02 | 3000.00 | 1500.00 |
| 03 | இலக்கம்-03 | 3000.00 | 1500.00 |
| 04 | இலக்கம்-04 | 3000.00 | 1500.00 |
| 05 | இலக்கம்-05 | 3000.00 | 1500.00 |
| 06 | இலக்கம்-06 | 3000.00 | 1500.00 |
| 07 | இலக்கம்-07 | 3000.00 | 1500.00 |

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**பருத்தித்துறை பிரதேசசபை.** (C-4258) **05.11.2025**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளவிக்கொட்டு...

நேற்று முன்தினம் மரணமடைந்துள்ளார்.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த கந்தசாமி சிறிஸ்கந்தநாதன் (வயது-61) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

கடந்த முதலாம் திகதி பிற்பகல் மாடு அவிழ்க்க வீதியால் நடந்து சென்ற போது குளவிக்கொட்டுக்கு இலக்கான நிலையில் வலந்தலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## உடுவிலில்...

பட்டுள்ளது.

இதில் கட்டுடை மானிப்பாயைச் சேர்ந்த தவராசா ஜெயசுதன் (வயது-45) என்ற இளம் குடும்பஸ்தரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## இளம் குடும்பப்...

நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த இ.சிந்துஜா (வயது-25) என்ற ஒரு பிள்ளையின் தாயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் அவரது கணவர் மற்றும் குழந்தையுடன் வீட்டில் இருந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் உயிரிழந்த பெண்ணின் தாயார் பணி நிமிர்த்தம் வெளியில் சென்றுவிட்டு மாலை வீட்டிற்குச் சென்று பார்த்தபோது தனது மகள் சடலமாகக் கிடந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளார்.

கழுத்துப் பகுதியில் கூரிய ஆயுதத்தால் வெட்டப்பட்டமையால் குறித்த மரணம் நிகழ்ந்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதேவேளை பெண்ணின் கணவரும் அவரது இரண்டு வயதான பெண் குழந்தையும் மாயமாகியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,250)

## யாழில் கடன்...

ளது.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் இரத்தினசபாபதி (வயது-72) என்பவரே உயிரிழந்தவராவார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## நிமோனியாத்...

பிள்ளையின் தந்தையே உயிரிழந்தவராவார்.

கடந்த திங்கட்கிழமை வீட்டின் ஐந்தடி உயரமான ஓட்டில் இரவு அவர் படுத்திருந்தபோது விழுந்து உயிரிழந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டார்.

சம்பவ இடத்திற்கு நேற்று (04) சென்ற யாழ்.மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் மரண விசாரணைகளை மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனையில் அவர் நிமோனியாத் தொற்றால் மரணமடைந்துள்ளார் என அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,60)

## சங்குப்பிட்டியில்...

பூநகரி - சங்குப்பிட்டி பாலத்திற்கு அருகில் அண்மையில் பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக

நபரான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தவில் வித்துவான் கைது செய்யப்பட்டுள்ளார்.

குப்பிளான் பகுதியைச் சேர்ந்த தவில் வித்துவானை நேற்றுச் செவ்வாய்க்கிழமை அதிகாலை வேளை கிளிநொச்சி மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் அடிப்படையில், படுகொலை செய்யப்பட்ட பெண் அணிந்திருந்த சுமார் 10 பவுண் நகையை சுன்னாகம் பகுதியில் உள்ள தனியார் நிதி நிறுவனத்தில் அடகு வைத்து 17 இலட்ச ரூபாய் பணத்தினைப் பெற்று, அப்பணத்தினைத் தனது சொந்தத் தேவைகளுக்காக செலவழித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

அதன் அடிப்படையில் குறித்த தனியார் நிதி நிறுவனத்தில் அடகு வைத்த நகைகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்தி, மேலதிக விசாரணைகளுக்காக 72 மணித்தியால பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரணை செய்ய நீதிமன்றில் பொலிஸார் அனுமதி கோரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7,33)

## வன்...

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டிற்குள் அத்துமீறி உள்நுழைந்த வன் முறைக் குழு அங்கு நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கரவண்டி மீது தீ வைத்துள்ளது.

இதனால் முச்சக்கர வண்டியானது முழுமையாக தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

மேலும் வீட்டுக்கு தீ வைக்கப்பட்டதுடன், வீட்டில் உள்ள பொருட்களும் அடித்து நொறுக்கப்பட்டன.

இந்நிலையில் விழிப்படைந்த வீட்டார் தீயை அணைத்ததால் பாரிய சேதங்கள் ஏற்படுவது கட்டுப்படுத்தப்பட்டது.

இச்சம்பவம் குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில்

முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-7,104)

## மன்னாரில்...

டிப்பர் ரக வாகனமும் ஆட்டோவும் மோதிக்கொண்டதில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் பொற்கேணியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவர் ஆவார். (ம-7)


வேலைவாய்ப்பு

யாழ்.நகரப் பகுதிகளில் உள்ள லொத்தர் விற்பனை நிலையங்களில் விற்பனை உதவியாளர்கள் தேவை. பகுதிநேரமாகப் பணிபுரிய விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம். விரும்பின் தங்குமிடம், உணவு ஏற்பாடு செய்து தரப்படும்.

077 843 5224
077 603 1723 (5826)

மஹஜன சம்பத — திகதி 2025.11.04 — சீட்டிழுப்பு இலக்கம் 6003 — A 9 0 8 6 8 7
அத சம்பத — A 8 6 8 7 — சீட்டிழுப்பு இலக்கம் 0578
National Lotteries Board

சுப தவசக் — திகதி 2025.11.04 — சீட்டிழுப்பு இலக்கம் 119 — இடபம் 01 43 49

தன நிதானய — திகதி - 2025.11.04 — சீட்டிழுப்பு இலக்கம் - 2033 — Q 03 46 50 76 Q

மெகா பவர் — திகதி 04/11/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2351 — U 20 06 27 54 57

ஜய — திகதி 2025.11.04 — சீட்டிழுப்பு இலக்கம் 0271 — P 2 9 9 7

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4245 — சீட்டிழுப்பு திகதி 04.11.2025 — S 05 31 70 78 — S

ஹந்தஹன — HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.11.04 — சீட்டிழுப்பு இலக்கம் 1312 — மேடம் 22 38 45 46 மேடம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — துரித ධන සම්පත — 04.11.2025 — வெற்றி வாரம் 0711 — ஆங்கில எழுத்து J — 6 1 5 8 9 2 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,894,386.40 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2977 — சீட்டிழுப்பு திகதி 2025.11.04 — தினம் செவ்வாய்க்கிழமை — 03 30 48 75 Y — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.72,455,420.80 — DLB

சனிதா — திகதி 04.11.2025 — வெற்றி வாரம் 5138 — 03 05 58 66 Q — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,163,361.60 — DLB

சசிரி — வெற்றி வாரம் 807 — 04.11.2025 — செவ்வாய்க்கிழமை — 10 25 28 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4689 — சீட்டிழுப்பு திகதி 04.11.2025 — தினம் செவ்வாய்க்கிழமை — 27 36 44 55 — மீனம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00 — DLB

கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — P 37 03 11 22 48 — 2153 — 04.11.2025 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.604,837,063.40 — DLB

அத கோடிபதி — ADA KOTIPATHI — செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம் 2803 — சீட்டிழுப்பு திகதி 2025.11.04 — 01 17 57 60 S — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,082,024.80 — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணப்பெண் தேவை

01.கரவெட்டி, இந்து, 1993, பூரட்டாதி, Graduate, Civil Engineer, Singapore மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
02.அளவெட்டி, இந்து, 1989, பரணி, Senior Software Engineer, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
03.கொல்லன்கலட்டி - புன்னாலைக்கட்டுவன், இந்து, 1991, அனுஷம், Msc, Denmark Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
04.மட்டுவில் - மீசாலை, இந்து, 1985, கேட்டை, Computer Engineer, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
05.காரைநகர், இந்து, 1988, பரணி, Masters Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
06.இணுவில், இந்து, 1986, ரோகிணி, Bachelor Of IT, Norway Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
07.மானிப்பாய் - அச்சுவேலி, இந்து, 1987, பரணி, CIMA + Charted Accountant, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
08.காரைநகர் - நவாலி, இந்து, 1992, சுவாதி, Graduate, New Zerland + Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
09.குப்பிளான் - கொக்குவில், இந்து, 1990, கேட்டை, MBA Phd Director, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
10.மண்டைதீவு, இந்து, 1989, மூலம், MBBS Doctor, மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
(5831)

## காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை சங்கரத்தைச் சந்தி, ஞானசம்பந்தர் வீதியில் 100m தூரத்தில் நல்ல சூழலில் 3 3/4 பரப்பு, நல்ல தண்ணீர் கிணறு மற்றும் நல்ல நிலையிலுள்ள வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு. வசிப்பிடம், வணிக நோக்கத்திற்கு ஏற்றது.
(5829)

**076 023 3301**

## வேலையாட்கள் தேவை

கட்டிட வேலைக்கு மேசன், கூலியாள் போன்றோர் தேவை.

தொடர்புகளுக்கு :
**074 117 5986**
(5828)

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)
சம்பளம் 30,000/- இலிருந்து 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
(C-4260)

V2 TRAVELS 076 1410725, 076 8226236
v2vacancies@gmail.com

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3670/-
11-16 Kg 2640/-
21-27 Kg 2440/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-4260)

UK 11Kg - 1390/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241, 076 822 6237

## யாழ்ப்பாணத்தில் Voyzant

10 பேர் கொண்ட குழுவில் ஒரு நபரிற்கு - 185,000/=

தென்னிந்திய ஆலய தரிசனம் 09 இரவுகள்/10 நாட்கள்



தமிழ்நாட்டில் பிரசித்தி பெற்ற 35 இற்கு மேற்பட்ட ஆலயங்கள் (மேலும் தனிப்பட்ட கோரிக்கைகளுக்கான சுற்றுலாப் பயணங்களும் மேற்கொள்ளப்படும்.)

மேலதிக விபரங்களுக்கு:
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். (OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866
Voyzant(PVT)Ltd
(5725)

## யாழில் மூவர் கைது

யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் நேற்று மாலை போதை வஸ்துக்களுடன் 3 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

24, 26 மற்றும் 28 வயதுகளையுடைய இளைஞர்களே கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களிடமிருந்து 100 மில்லிகிராம் கஞ்சா, 30 மில்லி கிராம் ஹெரோயின், 5 போதைப் பொருள் மாத்திரைகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ம-7)

## வேலையாட்கள் தேவை

யாழ். நகர் ஆவரங்காலில் இயங்கிவரும் அவிக்னா மோட்டார் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை. ஆண் /பெண் இருபாலாரும்.

- சேவிஸ் போடுபவர் (2W, 3W service boys)
- சிட்டை எழுதுநர் (Bill Clark)
- காசாளர் (Cashier)

(C-4257)

தொடர்புகொள்ள வேண்டிய நேரம் : காலை 9.00 – மாலை 5.30 மணிவரை

அவிக்னா மோட்டார்
பருத்தித்துறை வீதி, ஆவரங்கால் சந்தி, யாழ்ப்பாணம். 0771748242

## உடன் விற்பனைக்கு

- யாழ். ஆஸ்பத்திரி வீதியில் SVM களஞ்சியசாலைக்கு முன்பாக 15 அடி அகலமும் 30 அடி நீளமும் கொண்ட கடையும்
- யாழ். கஸ்தூரியார் வீதியில் கபிலா பாட்டாவிற்கு அண்மையில் 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட தனிக் கடையும்
- யாழ். மானிப்பாய் வீதியில் ஈழநாடு காரியாலயத்திற்கு முன்பாக 6 பரப்புக் காணியும்
- யாழ். ஒஸ்மேனியா கொலிஜிற்கு அண்மையில் ஒஸ்மேனியா வீதி முகப்புடன் 6 1/2 பரப்பில் அமைந்த காணியும் வீடும் உடன் விற்பனைக்கு உண்டு.

(C-4256)

**0777 23 25 35**




2024ம் ஆண்டு உயர்தரப் பரீட்சையின் (A/L) பின்னர்,

## ESOFT METRO CAMPUS - JAFFNA

யாழ் கிளையில் UK Level 3 டிப்ளோமா கற்கை நெறிகளை

வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து, வருடாந்த விருது வழங்கும் விழாவில் கலந்துகொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

450+ மாணவர்கள் | Diploma Awards | 05, காத்திகை மாதம் | திருவள்ளுவர் கலாசார மண்டபம்

ESOFT Shaping Lives, Creating Futures.
**ESOFT METRO CAMPUS - JAFFNA**
No.137, K.K.S Road, Jaffna | 021 7 572 572 | 076 8700 400
Shaping Lives, Creating Futures.
(5827)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.